விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 16 செவ்வாய்க்கிழமை (29.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

# 67 அடி உயர புத்தர் சிலை நயினாதீவில் நிறுவப்படும்

## உறுதிப்படுத்தினார் வடக்கு ஆளுநர் குரே




கோப்பு படம்

(யாழ்ப்பாணம்)


**கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் நயினாதீவில் 67 அடி உயர பிரமாண்டமான புத்தர் சிலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.**

ஆளுநர் அலுவலகத்தில் நேற்றையதினம் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில் நயினைதீவு நாகவிகாரைக்கும் நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட இடப்பரப்பில் 67 அடி உயர மான புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கான

23ஆம் பக்கம் பார்க்க....

## நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்

### ஆனந்த தேரர் அறைகூவல்



(கொழும்பு)

நாட்டுக்கும்மக்களுக்கும் அழிவை கொண்டு வரும் சகல சந்தர்ப்பங்களிலும் பௌத்த மத தலைவர்கள் முன்னுக்கு வந்து அதற்கு எதிராக குரல் கொடுத்துள்ளதாக அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆன

23ஆம் பக்கம் பார்க்க....

## வித்தியா படுகொலை வழக்கு;

## சந்தேக நபர்களை சட்டத்தரணி சந்திப்பதற்கு நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படு கொலை வழக்கின் சந்தேக நபர்களை அவர்களது சட்டத் தரணி சந்திப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

எனினும் நீதிமன்றின் விசேட அனுமதியுடன் மட்டுமே அவர்களை சந்திக்க முடியுமென ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம்.ரியால், சந்தேக நபர்களுக்காக ஆஜராகியிருந்த சட்டத்தரணிக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு குற்றப் புலனாய்வு துறையினரால் நீதி மன்றில் தெரிவிக்கப்பட்ட கண்கண்ட சாட்சியை எதிர்வரும் முதலாம் திகதி ஆஜர்படுத்தவுள்ளதாக அறிய முடிகின்றது. புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம்.ரியால் முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

24ஆம் பக்கம் பார்க்க....

### ஆங்காங்கே சிறு மழை பெய்தாலும்

## அதி உஷ்ணமான வானிலை மேலும் தொடர வாய்ப்பு

(கொழும்பு)

கடந்த ஜனவரியில் இருந்து நாட்டில் அதிக உஷ்ணமான வானிலை நிலவுகிறது.

நேற்று சில பிரதேசங்களில் மழை பெய்தாலும் மே மாதம் வரை போதுமான மழையை எதிர்பார்க்க முடியாது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வெப்ப நிலை இரண்டு அல்லது மூன்று மூன்று பாகை செல்சியசால் அதிகரித்துள்ளது. இது தொடர்பில் கரு

23ஆம் பக்கம் பார்க்க....

## மின்வெட்டு அறிவிப்பை மின்சார சபை வாபஸ்

(கொழும்பு)

கால அட்டவணையின் அடிப்படையில் முழு நாட்டையும் மூன்று வலயங்களாக பிரித்து ஒரு நாளைக்கு மூன்று மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த செய்தியை

23ஆம் பக்கம் பார்க்க....

## ஞானசார தேரரை நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)


பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இரண்டாவது முறையாகவும் அறிவிப்பாணை விடுத்துள்ளது.

மாலபே தலாஹேன பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை தாக்கி சேதப்படுத்திய சம்பந்தம் தொடர்பாக பொது பல சேனா

24ஆம் பக்கம் பார்க்க....

## தான் கைது செய்யப்படுவதை தடுக்கக்கோரி பஷில் மனு!

### உச்ச நீதிமன்றம் மறுப்பு




(கொழும்பு)

தன்னைக் கைது செய்வதை தடை செய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல்போன மகனின் நினைவால் விரக்தியடைந்த தந்தை தற்கொலை!

### தனித்து துயரில் தவிப்பதாக தாயார் சாட்சியம்



(மன்னார்)

கடைக்குச் சென்ற மகன் வீடு திரும்பாத நிலையில் விரக்தியடைந்த தந்தை ஒரு வாரம் கழிந்த நிலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக காணாமல்போன பாடசாலை மாணவனான யோகநாதன் குருசேத்மன் என்பவரது தாயார் யோகநாதன் தவசிமணி நேற்று திங்கட்கிழமை

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு வெசாக் பண்டிகையில் தமிழில் பிரித் ஓத ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கொண்டாடப்படவுள்ள வெசாக் பண்டிகையில் முதன்முதலாக தமிழில் பிரித் ஓதுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

வெசாக் பண்டிகை தொடர்பாக வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டும் வடக்கை

23ஆம் பக்கம் பார்க்க....

# நீர்க்குழியில் சிறுமியின் சடலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருப்பெருந்துறை பகுதியில் நீர் நிரம்பிய குழியொன்றிலிருந்து சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் சடலத்தை மீட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்த சடலம் மட்டக்களப்பு பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 17 வயதான சிறுமியுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் சிறுவர்கள் விடுதியொன்றில் தங்கியிருந்து கல்வியைத் தொடர்ந்து வந்த சிறுமியொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விடுதியிலுள்ளவர்கள் இவரை காணாமல் தேடிய போதே சடலத்தை கண்டுள்ளனர்.

சிறுமியின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (செ-11)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகர் மற்றும் கொக்குவிலில் இயங்கிவரும் எமது ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை. நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். EPF / ETF உடன் திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.

- உணவு மற்றும் ஐஸ்கிறீம் பரிமாறுநர்கள்
- உதவி எலக்றிசியன் (ஓரளவு Electrical Machanical வேலை செய்ய கூடியவர்கள்)
- உதவியாட்கள் / வேலை பழக விருப்பமுள்ளோர். (O/L, A/L முடித்த 20-25 வயதிற்குட்பட்டோர்)
- உணவக மேற்பார்வையாளர்
- விற்பனைபிரதிநிதி (Sales Rep)
- ஐஸ்கிறீம் வாகன சாரதி ( ஐஸ்கிறீம் வாகனத்தில் அனுபவமுள்ள- ஐஸ்கிறீம் விற்பனையில் அனுபவமுள்ள AD சாரதி அனுமதி பத்திரமுள்ளவர்கள்)
- ஐஸ்கிறீம் பட்டறை வேலை செய்ய கூடியவர்கள்
- ஐஸ்கிறீம் உற்பத்திப்பிரிவில் (கொக்குவிலில்) வேலை செய்ய கூடிய உற்பத்தி, பொதியிடல் கிளீனிங் வேலையில் அனுபவமுள்ள/ அனுபவமில்லாத பெண் பிள்ளைகள்

நல்ல சுகாதார பழக்கவழக்கங்களுடன் மருத்துவ ரீதியில் உணவு கையாளக்கூடிய திறன் கொண்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

**ஷைலோ ஐஸ்கிறீம் மற்றும் உணவகம்**
**இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**0777 710785**

(4036)


# புளூ ரிச் கப்பலை ஜனாதிபதி பார்வை




(கொழும்பு)

ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று முற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான புளூ ரிச் (Blue Ridge) கப்பலை பார்வையிட்டுள்ளார்.

கப்பலுக்கு வருகை தந்த ஜனாதிபதி அமெரிக்க கடற்படையினரால் இராணுவ மரியாதைகளுடன் கௌரவமாக வரவேற்கப்பட்டார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே நட்புறவை வளர்க்கும் நோக்கில் புளூ ரிச் கப்பல் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன், 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு பின் அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான கப்பல் இலங்கை வந்தடைந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

புளூ ரிச் கப்பலுடன் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த 900 வீரர்களை உள்ளடக்கிய குழுவொன்று இலங்கை வந்துள்ளதுடன், இவர்கள் இலங்கை கடற்படையுடன் குறுகிய கால பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

கப்பலை பார்வையிட்ட ஜனாதிபதி கப்பல் கப்டன் உட்பட பணிக்குழாத்தினருடன் சிநேக பூர்வமாக உரையாடினார்.

இதன்போது ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டது. (செ-11)

## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெயமாலா ஆயவன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **கைலாசபிள்ளை செல்வராணி**
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (4040)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

## மரண அறிவித்தல்

### திரவியம் அகிலேஸ்வரன்



கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் பெரியவிளான் 5-ம் கட்டை இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் அகிலேஸ்வரன் 27-03-2016 அன்று அகால மரணமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அதாவது 29.03.2016 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
0777446505

(4041)

## முல்லைத்தீவு வடக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

எமது சங்கத்தின் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி : கணக்காளர் :** சம்பள அளவுத்திட்டம் : 14590-130X10-140X10 -17290
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : (அ) கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத்திட்ட கணக்கு பதவியியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ)ஐக்கிய இராச்சிய கணக்குப் பதவியியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்காளர் அல்லது கணக்கு பரிசோதனை அனுபவம் சம்பந்தமான பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) கணக்கியல் உட்பட பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அத்துடன் கணனி அறிவுத்திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பதவி : எழுதுநர் :** சம்பள அளவுத்திட்டம் : 13515-110X10-120X10 -15815
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : (அ) கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த.(சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**களஞ்சிய முகாமையாளர் :** சம்பள அளவுத்திட்டம் : 13515-110X10-120X10 -15815
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : (அ) கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விற்பனை உதவியாளர் :** சம்பள அளவுத்திட்டம் : 12800-100X10-14900
(அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்டதரச் சான்றிதழ்

அல்லது

(ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (3) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**அலுவலக உதவியாளர் :** சம்பள அளவுத்திட்டம் : 12800-100X10-14900
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : 8ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்


**குறிப்பு:** மேற்படி விண்ணப்பதாரி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் வயதெல்லை 18-45 க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டை பிரதியும் கல்விச்சான்றிதழ் பிரதியும் மற்றும் கிராமசேவையாளரின் வதிவிடச் சான்றிதழ் ஏனைய தகைமைச் சான்றிதழ் பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். அத்துடன் தாங்கள் தெரிவு செய்யும் பதவியினை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி - 18.04.2016

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி : தலைவர்
முல்லைத்தீவு / வடக்கு
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
வலையன்மடம், முல்லைத்தீவு.

(C-4155)

# இறுதிப்போரில் ஈடுபட்ட இலங்கை படையினரின் மனோநிலை மாறவில்லை



## யாழ். படைகளின் கட்டளைத் தளபதி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வடக்கிலுள்ள பொதுமக்கள் தேசிய பாதுகாப்பை பாதுகாக்கும் வகையில் எமக்கு ஒத்துழைப்பு கொடுத்து செயற்படுகின்றனர். ஆனால் இறுதிப்போரில் ஈடுபட்ட இலங்கை படையினரின் மனோநிலையில் இன்னமும் மாற்றங்கள் ஏற்படவில்லை என யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

பலாலியில் உள்ள பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஊடகவியலாளரின் கேள்விகளுககு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியாக, படைத்தரப்பின் கண்காணிப்பு அல்லது அவர்களை பின்தொடரும் எந்த சம்பவங்களும் தற்போது இடம்பெறுவதில்லை. தொடர்ச்சியாக இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருவது வெறும் வதந்தி மட்டுமே.

ஊடகத்துறைக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இருந்த நெருக்கம் மிகவும் குறைவாக இருந்தமை இவ்வாறான கருத்துகளை ஏற்படுத்த காரணமாக அமைந்து விட்டது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததில் இருந்து எமது இராணுவம் மிகவும் பலமான நிலையில் உள்ளதுடன், மக்கள் மத்தியில் மிகவும் கண்ணியமாகவும் தமது கடமைகளை மேற்கொண்டு வருகிறது.

வடக்கில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள், இராணுவத்தினருடன் கொண்டிருந்த தொடர்பு குறைவாகவே இருந்தது. வடக்கில் ஊடகவியலாளர்களையோ அல்லது ஊடகங்களையோ கட்டுப்படுத்த வேண்டிய தேவை எப்போதும் இராணுவத்தினருக்கு இருக்கவில்லை.

ஒரு சிலரின் கருத்துகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தவறான கருத்துகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் இல்லை.

போர் நடந்த காலத்திலும், இறுதிப் போர் நடந்த காலத்திலும் களத்தில் இருந்து போராடிய இராணுவத்தினர் இன்றும் இராணுவத்தில் உள்ளனர். அவர்களின் மனநிலைமை இன்னும் சற்று மாறுபட்ட ஒன்றாகவே உள்ளது. அவர்களையும் மக்களையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டங்களை விரைவில் மேற்கொள்ள முடியும்.

எந்த அரசாங்கமாக இருந்தாலும் எந்த அணியினர் ஆட்சியை கைப்பற்றினாலும் நாம் எந்த அரசாங்கத்தையும் சார்ந்து கட்சிகளைப்போல செயற்பட முடியாது.

எமது கடமை நாட்டின் தேசிய பாதுகாப்பை பலப்படுத்தி நாட்டை காப்பாற்றுவதேயாகும். அதை நாம் ஒவ்வொரு முறையும் சரியாக செய்து வருகிறோம்.

நீண்டகால போராட்டத்தில் பல இழப்புகளின் பின்னர் நாம் போரை வெற்றிகொண்டு எமது நாட்டை பாதுகாத்துள்ளோம். அந்த வெற்றியை மீண்டும் தாரைவார்த்து நாட்டை பிரச்சினைக்கு உள்ளாக்க விடமாட்டோம்.

அதேபோல் போர் முடிவுக்கு வந்ததில் இருந்து பெருமளவில் பொதுமக்களின் காணிகளை இராணுவம் தக்கவைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நிலங்களில் அரச நிலங்களும் பெரும்பாலான பொதுமக்களின் நிலங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அரச நிலங்களில் பாதுகாப்பு முகாம்களை தொடர்ந்தும் வைத்திருப்பது எந்த சிக்கலையும் ஏற்படுத்தாது. ஆனால் பொதுமக்களின் காணிகளில் இராணுவ முகாம்களை அமைக்கவோ அல்லது இராணுவத்தை தங்கவைக்கவோ முடியாது.

எனவே போரின் பின்னர் இராணுவம் வசம் இருந்த பொதுமக்களின் காணிகளை உரிய மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. இப்போது வரையிலும் பொதுமக்களின் காணிகளை நாம் அவர்களிடம் ஒப்படைத்து வருகின்றோம். எஞ்சியுள்ள காணிகளையும் உரிய மக்களுக்கு ஒப்படைப்பது எமது பொறுப்பாகும்.

அதேபோல் இராணுவ வெளியேற்றம் அல்லது தேசிய பாதுகாப்பு விடயத்தில் கேள்வியை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதாக சிலர் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கில் தேசிய பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு அச்சம் ஏற்படுத்தும் எந்த சூழலும் இல்லை. அதேபோல் இராணுவம் மட்டுமல்லாது கடற்படையினர், விமானப்படையினரின் முழுமையான ஒத்துழைப்புடன் வடக்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கூக்குரல் இடுவதனால் கட்சியை வீழ்த்த முடியாது

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

கூக்குரல் இடுவதனால் கட்சியை வீழ்த்த முடியாது என உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளா சந்திப்பில் அவர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆகியோர் பங்கேற்கும் கூட்டங்களில் பங்கேற்று கூக்குரல் இடுவதனால் கட்சியை தோற்கடித்துவிட முடியாது.

சிலர் திட்டமிட்டு இவ்வாறு கூக்குரல் இடுவதனால் கட்சியை உள ரீதியாக பாதிப்படைச் செய்ய முடியும என நினைக்கின்றார்கள்.

ஒன்றைக் கூற விரும்புகின்றேன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் போன்று நேர்மையான, ஜனநாயக ரீதியான ஓர் அரச தலைவர் நாட்டில் இருந்ததில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரிபால சிறிசேனவிற்கோ, மகிந்த ராஜபக்ஷவிற்வோ அல்லது சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கோ சொந்தமான தனிச்சொத்து கிடையாது.

இதனால் அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து கட்சியை பாதுகாத்து கொள்ள முயற்சிக்க வேண்டுமென பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மீன்தடை குறித்து ஆராய பிரஸல்ஸ் செல்லும் குழு

ஐரோப்பிய ஒன்றிய மீன் தடை குறித்து ஆராய்வதற்கு இலங்கையின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று பிரஸல்ஸ் செல்லவுள்ளது. பிரதமர் செயலணியைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் அங்கம் வகிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி ஐரோப்பிய சந்தைக்கு இலங்கை மீன்கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது. மேலும் இந்த தடையை நீக்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய குழுவொன்றை கடந்த ஆண்டு மார்ச் மாதம் நியமித்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் நியமிக்கப்பட்ட இக்குழுவே தற்போது பிரஸல்ஸ் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, நெதர்லாந்து, மற்றும் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இலங்கை மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நெரிசலை தவிர்ப்பதற்கு கைதிகளுக்கு விடுதலை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நிலவி வரும் கடுமையான இடப்பற்றாக்குறை காரணமாக வயது முதிர்ந்த கைதிகளை விடுதலை செய்வது குறித்து சிறைச்சாலை திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலமாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் வயோதிப கைதிகளை விடுதலை செய்வதன் மூலம் சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலை தவிர்க்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.


இதன்படி பொது மன்னிப்பின் அடிப்படையில் வயது முதிர்ந்த கைதிகளை விடுதலை செய்ய திட்டமொன்றை வகுப்பது குறித்து சிறைச்சாலைத் திணைக்களம் கவனம் செலுத்தி வருகின்றது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பத்தாயிரம் கைதிகள் இலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வயது முதிர்ந்தவங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வயது முதிர்ந்த கைதிகள் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரியொருவர் சிங்கள ஊடகமொனறுக்குத் தெரிவிதுள்ளார். (இ-5)

# நடப்பு சம்பியன் இலங்கையை வீழ்த்தி தென்னாபிரிக்கா ஆறுதல் வெற்றி



இலங்கை அணிக்கு எதிரான உலக கோப்பை இருபது- 20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

உலகக்கிண்ண 20 ஓவர் கிரிக்கெட் தொடரின் கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று அரையிறுதிக்கு தகுதி பெறாத அணிகளான இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயசுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதன்படி இலங்கை அணி முதலில் துடுபபெடுத்தாடியது. தொடக்க வீரர்கள் சந்திமலும்(21), டில்ஷானும்(36) அந்த அணிக்கு நல்ல தொடக்கத்தை கொடுத்தார்கள்.

ஆனால் அதன் பிறகு களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

19.3 ஓவரில் இலங்கை அணி 10 விக்கெட்களை இழந்து 120 ஓட்டங்கள் எடுத்துள்ளது. தென்னாபிரிக்கா தரப்பில் ஸ்டெயின், இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும், கைல் அபாட், ஆரோன் பாங்கிசோ, பெகர்டீன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்கள்.

பின்னர் 121 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி 17.4 ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அம்லா ஆட்டமிழக்காது 56 ஓட்டத்தினை பெற்றார்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்கா அணியின் ஆரோன் பாங்கிசோ தெரிவானார். (க)



# நாம் எப்போதும் ஹோலியை மட்டுமே நம்பிக்கொண்டிருக்க கூடாது

## டோனி தெரிவிப்பு



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சிறப்பாக ஆடிய விராட் ஹோலிக்கு இந்திய அணித்தலைவர் டோனி பாராட்டு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மொகாலியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 போட்டியில் தனியாளாக போராடிய ஹோலி, கடைசி வரை ஆட்டமிழக்காமல் 51 பந்துகளில் 82 ஓட்டங்கள் குவித்து இந்திய அணியின் வெற்றிக்கு உதவினார்.

இந்நிலையில், நாம் எப்போதும் ஹோலியை மட்டுமே நம்பிக் கொண்டிருக்க கூடாது. மற்ற வீரர்களும் பங்களிப்பை வழங்க வேண்டும் என்று சொதப்பி வரும் தொடக்க வீரர்கள் ஷிகர் தவான், ரோஹித் சர்மாவுக்கு குட்டு வைத்துள்ளார் டோனி.

டோனி மேலும் கூறுகையில்,

ஹோலியை தவிர்த்து இந்திய அணியின் மற்ற துடுப்பாட்ட வீரர்கள் 60 அல்லது 65 சதவீதத்தை மட்டும் தான் தங்களது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்கள். அவர்கள் அதை மாற்றி முழு திறமையோடு ஆட வேண்டும்.


மேலும், ஹோலியின் ஆட்டத்தை எதிர்முனையில் நின்று நான், ரசிப்பது இது முதன முறை கிடையாது. கடந்த சில வருடங்களாக ஹோலி தனது ஆட்டத்தை தானே மேம்படுத்தியுள்ளார்.

அணிக்காக ஓட்டங்களை குவிக்க வேணடும் என்ற பசி அவரிடம் அதிகமாகவே உள்ளது. எனவேதான் அவர் ஒவ்வொரு போட்டியிலும் புதிய உச்சங்களை தொட்டு வருகிறார்.

ஓடி ஓட்டங்கள் சேர்ப்பது என்பது தற்போதைய் கிரிக்கெட் உலகில் மிக முக்கியமான செயலாகும்.

ஒரு ஓட்டம் ஓட வேண்டிய நேரத்தில் இரண்டு ஓட்டங்களை ஓடுவது எதிரணியினருக்கு சோர்வை கொடுக்கும். நானும் ஹோலியும் இதைத்தான் செய்தோம் என்று கூறியுள்ளார். (க)

# சர்வதேச டென்னிஸ் போட்டி செரீனா 750-வது வெற்றி



மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் 3-வது சுற்று ஆட்டம் ஒன்றில் 'நம்பர் ஒன்' வீராங்கனையும், 8 முறை சம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் 97-ம் நிலை வீராங்கனையான ஜரினா டியாசை (கஜகஸ்தான்) வீழ்த்தி கால்இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

சர்வதேச டென்னிசில் செரீனாவின் 750-வது வெற்றி இதுவாகும். இந்த மைல்கல்லை எட்டிய 7-வது வீராங்கனை செரீனா ஆவார்.

இந்த சாதனை வரிசையில் முதல் 6 இடங்களில் அமெரிக்காவின் நவரத்திலோவா (ஆயிரத்து 442 வெற்றி), கிறிஸ் எவர்ட் (ஆயிரத்து 309), ஜெர்மனியின் ஸ்டெபி கிராப் (902), இங்கிலாந்தின் விர்ஜினியா வேட் (839), ஸ்பெயினின் சாஞ்சஸ் விகாரியோ (759), அமெரிக்காவின் லின்சே டேவன்போர்ட் (753) ஆகியோர் உள்ளனர். செரீனா 125 ஆட்டங்களில் தோற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஒற்றையர் 2-வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீரர் ஸ்பெயினின் ரபெல் நடாலுக்கு எதிரான ஆட்டத்தில் டாமிர் ஜூம்ஹர் (போஸ்னியா) 2-6, 6-4, 3-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போது, 'தலைசுற்றல்' காரணமாக நடால் விலகினார். இதனால் ஜூம்ஹர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஆட்டத்தை முழுமையாக நிறைவு செய்யாமல், பாதியிலேயே நடால் விலகுவது 2010-ம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும். இன்னொரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் முன்னணி வீரர் வாவ்ரிங்கா 4-6, 3-6 என்ற நேர் செட் கணக்கில் ரஷ்யாவின் ஆந்த்ரே குஸ்னெட்சோவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டார். (க)

# ஆப்கானிஸ்தான் கொண்டாட்டத்தில் கிறிஸ் கெயில் இணைவு




இருபது-20 உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆப்கானிஸ்தான் அணி, இங்கிலாந்து, இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளிடம் தோற்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நாக்பூரில் நடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டி அந்த அணிக்கு ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

ஆப்கானிஸ்தான் அணியின் வெற்றியை அந்த அணி வீரர்கள் உற்சாகமாக கொண்டாடினர்.

அவர்களின் வெற்றி கொண்டாட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்லும் இணைந்து கொண்டு அந்த அணி வீரர்களை உற்சாகப்படுத்தினார். (க)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 26.12.1974

விண்ணில் 14.02.2016

## பரஞ்சோதி கண்ணன்

(பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் வன்னி மாவட்ட MRS போக்குவரத்து சபைப் பொறுப்பாளரும், வடமாகாண தனியார் போக் குவரத்துத்துறை பொது முகாமையாளரும்)



அன்பால் எமை அணைத்து– உன்
ஆற்றலால் எமை ஆண்டாய்
இன் முகத்தினில் இணையற்று
ஈகையில் வாகை சூடினாய்
உன் புன் சிரிப்பில் என்றும்– பரு
ஊரையே பூரிக்க வைத்தாய்
ஒருவனாய் எம்மில் என்றும்
ஓயாமல் உழைத்து வந்தாய்
பண்பினில் பற்று வைத்து
பாசத்தால் எமை ஈர்த்து
நேசத்தால் எமை நெகிழவைத்து
நெடுநாளும் கண்ணா உனை
நேரமெல்லாம் நினைக்க வைத்தாய்
பாசமிகு பரஞ்சோதி பெற்ற
ஜோதியே கண்ணா நீ– எம்
அம்மா சூரியகாந்தி பெற்ற
சூரியப்புதல்வன் நீயே
காலமெல்லாம் கண்ணா– உன்
காதலால் நாம் நனைகின்றோம்
வேதனை எமை வாட்ட
வேண்டுமென்றே எண்ணி
கண்ணா எமைப்பிரிந்தாய்
எங்கு நீ சென்றாலும்
என்றும் எம்மில் நீ இருப்பாய்
ஏங்கும் எம் உள்ளங்கள்
ஏற்று நின்றன தீபங்கள் ஆயிரம்
ஏற்றுக்கொள் இறைவா
எங்கள் கண்ணா– விண்
ஆத்மா சாந்தியடைய...

என்றும் உனை நினைத்து வாடும்
நின் குடும்பத்தினருடன் சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உள்ளூர்
உறவினர் அனைவரும்.

சூரியகாந்தி
குடும்பத்தினர்.
சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

(4029)



யாழ்.நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் திருமதி கு.விஜயரகுநாதன் தலைமையில் இடம்பெற்றபோது...

# நிதி சேகரிக்கப்படும் போது பற்றுச்சீட்டு வழங்க வேண்டும்

## சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் பணிப்பாளர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**சமுர்த்தி செயற்பாடுகளில் எந்தவொரு நிதி சேகரிப்பு நடவடிக்கைகளின் போதும் சமுர்த்தி உத்தியோகத்தரால் பொது மக்களுக்கு பற்றுச்சீட்டு கட்டாயமாக வழுங்கப்பட வேண்டுமென வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சமுர்த்தி நடவடிக்கைகளான நிதி சேமிப்பு நடவடிக்கை மற்றும் கடன் அறவீடுகளை மேற்கொள்ளும் போது அந்தந்த பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் பொது மக்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுவதில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி செயற்பாடுகளில் உள்ள எந்தவொரு நிதி சேமிப்பு நடவடிக்கைகளின் போதும் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களால் பற்றுச்சீட்டு உத்தியோகத்தர்களால் பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை என்றால் அதை பொது மக்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பற்றுச் சீட்டை தரமுடியாது என உத்தியோகத்தரால் மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் தத்தமது சமுர்த்தி பிரிவின் வங்கி முகாமையாளருக்கோ குறித்த பிரதேச செயலருக்கோ அல்லது யாழ். மாவட்டச் செயலக வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளருக்கோ முறையிட முடியும்.

முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் சமுர்த்தி நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் சமுர்த்தி உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனைய சமுர்த்தி சங்க தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எவரும் ஈடுபட முடியாது.

அவ்வாறு நிதி சேகரிப்பில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் முறையிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பருத்தித்துறை நகரினில் மீண்டும் ஒருவழிப்பாதை

பருத்தித்துறை நகருக்குள் செல்லும் வீதி மீண்டும் ஒருவழிப்பாதையாக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியால் சென்று பருத்தித்துறை நகருக்குள் வங்கிகள் இருக்கும் பக்கம் ஒரு வழிப்பாதையாக்கப்பட்டுள்ளதனால் பயணிப்போர் இடது பக்க வீதியால் நவீன சந்தையைச் சுற்றியே வங்கி, சந்தைப் பகுதிக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

துறைமுக வீதியில் இருந்து பருத்தித்துறை நகருக்குள் செல்லும் வீதியில் ஒருவழிப்பாதையாக்கப்பட்டிருந்த நிலையில் பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அது நீக்கப்பட்டுள்ளது.

ஆனால் பிரதான வீதியில் இருந்து நகருக்குச் செல்லும் வழியில் மீண்டும் ஒரு வழிப்பாதையாக்கப்பட்டுள்ளதனால் துவிச்சக்கர வண்டிகளில் சந்தைக்கு, வங்கிகளுக்கு செல்வோர் நவீன சந்தையை சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முன்னர் இப்பகுதி ஒரு வழியாக்கப்பட்டுள்ள நிலையில் பின்னர் அது நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

## க.பொ.த.சா/த-2015 பெறுபேறுகள்

யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபணடித வித்தியாசாலை

ஆ.காயத்திரி-8ஏசி,அ.டிலக்சனா-3ஏ2பி2சிஎஸ்,அ.சயந்தினி-2ஏபி4சிஎஸ்,வி.யுலக்சிகா-2ஏ5சிஎஸ்,லெ.லதாயினி-4பி4சிஎஸ், சி.சங்கவி-ஏ3சி4எஸ்

## அலங்கார உற்சவகால தெய்வீகப் பேருரைகள்

சிறுப்பிட்டி வடக்கு இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானவருடாந்த அலங்காரஉற்சவப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவ காலங்களில் இரவு 7.30 மணிக்கு தெய்வீக ஞான தமிழருவி, வர்ணனைக் கலாநிதி காரை.எம்.பி அருளானந்தன் தெய்வீக பேருரை வழங்கவுள்ளார். (இ-5)

## வெளிநாட்டுப் பெண்ணிற்கு பயணத்தில் ஏற்பட்ட சிரமம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து யாழ் நோக்கி வந்த இ.போ.ச.பேருந்தில் பயணித்த வெளிநாட்டு பெண்ணொருவர் சரியான வழிகாட்டல் இன்றித் திண்டாடிய சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

குறித்த பேருந்தில் பயணித்த அப்பெண் மானிப்பாயில் இறங்க வேண்டிய நிலையில் சனநெரிசல் தொடர்பாடல் தடையினாலும் பேருந்தின் நடத்துநர் உட்பட யாருடைய உத வியும் கிடைக்காததாலும் யாழ். பேருந்து நிலையத்திலேயே வந்து இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதோடு குறித்த பேருந்து சாரதியினால் மீண்டும் பேருந்தில் ஏற்றப்பட்டு மானிப்பாய்க்கு அனுப்பப்பட்டார். (இ)

## மாட்டுக்கன்றுகள் பொலிஸார் வசம்

வீதியால் மாடுகளை கொண்டு சென்ற இருவரை பொலிஸார் விசாரிக்க முற்பட்டபோது அவர்கள் மாடுகளைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணியளவில் பருத்தித்துறை பொலிஸார் ரோந்து சென்றுகொண்டிருந்தபோது மந்திகை துன்னாலை வழியாக இரண்டு மாட்டுக்கன்றுகளைக் கொண்டு வந்த இருவரை விசாரிக்க முற்பட்ட போது அவர்கள் இருவரும் மாட்டுக்கன்றுகளைக் கைவிட்டு தப்பியோடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் பாதுகாப்பில் மாட்டுக் கன்றுகள் தற்போதுள்ளன. (இ-60)

## யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி பழைய மாணவர் சங்கம் உதயம்



பழைய மாணவர்களின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி நிகழ்வு கல்லூரியின் பணிப்பாளர் சு. முகுந்தன் தலைமையில் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் மேலதிக பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் உரைகளைத் தொடர்ந்து நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவர் சி.சிவஜன், செயலாளர் பி.பிரணவன், பொருளாளர் இ.குகன் ஆகியோருடன் 15 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புதிய தலைவர் சி.சிவஜன் தமது தலைமையுரையில் தாம் கல்லூரியின் நிலைப்பாட்டை நன்கு உணர்வதாகவும் இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக தம்மாலான உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார். (இ-5)




## கலந்துரையாடல்

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி பொது நூலகத்தால் 2016 ஆம் ஆண்டுக்கான நூலக அபிவிருத்தி தொடர்பாக வாசகர் மட்டம், ஆலோசனை சபைகளுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் புலோலி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் திருமதி ச.தர்மராசா அறிவித்துள்ளார். (இ-60)

## கசிப்பு உற்பத்தி தொடர்பாக கைதானவர் விளக்கமறியலில்

கசிப்பு உற்பத்தி மேற்கொண்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

முள்ளிக்காட்டில் கசிப்பு உற்பத்தி மேற்கொண்டமை தொடர்பில் ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தலைமறைவான துன்னாலையைச் சேர்ந்த இளைஞரை நெல்லியடிப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்து பதில் நீதிபதி முன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்தியபோதே பதில் நீதிபதி விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார். (இ-60)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378





# திருமுறையும் சைவத்திருநெறியும்

திருமுறையும் சைவத்திருநெறியும் பற்றிய திருமுறை மாநாட்டின் தொடக்க வைபவம் நாளை மறுதினம் 31ஆம் திகதி பி.ப 4.30 தொடக்கம் இரவு 8மணிவரை கொழும்பு-04,புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மலேசிய திருமுருகன் திருவாக்கு திருபீடம் தவத்திரு பாலயோக சுவாமிகளின் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார்.இந்துமத அலுவல்கள் புனர் வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் பிரதம விருந்தினராகவும் மீள்குடியே ற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு அமைச்சின் செயலாளர் வே.சிவ ஞானசோதி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

திருமதி சிவ கௌரி கிரீஷ்குமார் தலைமையில் நிகழும் பண்ணிசை நிகழ்வில் அண்ணாமலைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் எம்.கிரீஷ்குமார் புல்லாங்குழல், கிழக்குப் பல்கலைக் கழகம் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சியாமளாங்கி கருணாகரன் வயலின், மிருதங்கக் கலா கீர்த்தி பிரம்மஸ்ரீ க.சுவாமி நாதசர்மா மிருதங்கம் இசைக்கவுள்ளனர். (இ)


## யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle , UK
(C-3712)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (29.03.2016)
செவ்வாய்க்கிழமை கொழும்பு
பண்டாரநாயக்க ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
(BMICH) இடம்பெறும் பட்டமளிப்பு
விழாவில்
"விஞ்ஞான முதுமாணி"
M.SC பட்டம்
வழங்கப்பெறும்
Dr. மகாதேவன்
நிரஞ்சன் (BSMS)

மேலும் பல பட்டங்கள்
பெற்று சீரும் சிறப்புடன்
வாழ்வதற்காக
யாழ்ப்பாணம், கலட்டி,
சீனியர் ஒழுங்கை
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி
விநாயகரை வணங்கி
வாழ்த்துகின்றோம்.



(4011)

வாழ்த்துவோர்: துரையப்பா மகாதேவன், மகாதேவன் இராஜராஜேஸ்வரி, சோமசுந்தரம் முரளீதரன் (நாயன்மார்கட்டு) முரளீதரன் மாலினி- ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி, நிரஞ்சன் கமலாசனி, நிரஞ்சன் சஞ்சயன் (திருகோணமலை), மகாதேவன் ரவிஷங்கர், ரவிஷங்கர் இந்திராணி, ரவிஷங்கர் கஜானி (திருகோணமலை), விக்னராஜா உதயகுமார் , உதயகுமார் சுதா, உதயகுமார் இராகவி (லண்டன்)

# 45 ஆம் நாள் நினைவு

அமரர்
## பரஞ்சோதி கண்ணன்

பிறப்பு
1974.12.26

இறப்பு
2016.02.14



29.03.2016
அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய்
வாழ்ந்து வழிகாட்டிய
எமது அன்பின்
குல விளக்கே
அவனிதனில்
எமை விட்டுப்பிரிந்து
நாட்கள் 45 ஆகிவிட்டது.
ஆனால் நீர் எம் மனதைவிட்டு
என்றுமே நீங்கவில்லை.

குடும்பத்தினர்,
மனைவி-சகுந்தலா,
பிள்ளைகள்- திவா,
துவா, சூரியவதி.

மூங்கிலாறு தெற்கு,
தேராவில்.

(சி-4150)

# இராசி பலன்

29.03.2016
(பங்குனி 16, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 4.01 மணிவரை
அனுசம் காலை 7.01மணிவரை
சுபநேரம் 10.43-12.13 மணிவரை
இராகுகாலம் 3.13-4.43 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | | | |
| சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ், சந் | | |

**மீனம்**: திறமைமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், திடீர் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சொத்து பிணக்குகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மேடம்**: அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம்.

**இடபம்**: பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சீராகும், அடுத்தவர் நலனில் அக் கறை காட்டுவீர்கள், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து தீர்க்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்**: அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**: தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மகரம்**: முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்**: இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு**: தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்**: வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் பகை அகலும்.

**துலாம்**: தொலைபேசி வழியில் புதிய தகவல்கள் வந்து சேரலாம், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**: உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் நாள், எப்படிநடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

# 12 ஆயிரத்து 681 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவில்லை

## வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சின் தகவல்படி

வடக்கில் 12 ஆயிரத்து 681 குடும்பங்களைச் சேர்ந்த 44ஆயிரத்து 15 பேர் இன்னும் மீள்குடியேற்றப்படாத நிலையில் உள்ளதாக வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண மீள்குடியேற்றம் தொடர்பில் வினாவிய போதே அவ் அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் அரச அதிபருடன் இணைந்து மீள். குடியேற்றம் தொடர்பான தகவல்களை பெற்றிருந்தோம். அந்த வகையில் வடக்கில் இதுவரை ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 181 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 24 ஆயிரத்து 944 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதில் யாழ்ப்பாணத்தில் 31 ஆயிரத்து 845 குடும்பம், மன்னாரில் 26ஆயிரத்து 390 குடும்பம், வவுனியாவில் 16ஆயிரத்து 862 குடும்பம், கிளிநொச்சியில் 41 ஆயிரத்து 862 குடும்பம், முல்லைத்தீவில் 41 ஆயிரத்து 322 குடும்பங்கள் மீள்குடியேற்றப் பட்டுள்ளார்கள். இவை அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையானது.

இவை தவிர மீள்குடியேற்றப்படவுள்ளவர்களும் தற்போது இருக்கின்றார்கள். அதில் தற்போது முகாம்களில் ஆயிரத்து 608 குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரத்து 732 பேர் வாழ்கின்றார்கள். அதில் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 318 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 737பேர், வவுனியா மாவட்டத்தில் 290 குடும்பங்களைச் சேர்ந்த 995 பேர் வாழ்வதாகவும் தகவல்கள் இருக்கின்றன.

அதேமாதிரி தான் உறவினர்கள், நண்பர்களுடன் வாழும் குடும்பங்களும் கணிசமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். மொத்தமாக 11ஆயிரத்து 73 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 283 பேர் இவ்வாறு இருக்கின்றார்கள். ஆகவே, 12 ஆயிரத்து 681 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 15 பேர் இன்னும் மீள் குடியேற்றப்படாமல் இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




## 'துரோணர் முன்பள்ளி' விளையாட்டு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு "துரோணர்" மழலைகள் முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு முல்லை.கல்வி வலய முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் குகநேசபிள்ளை சிவசுப்பிரமணியம், சொலிற்றறி பவுண்டேஷன் நிறுவனத்தின் நிறைவேற்று திட்டப்பணிப்பாளர் வி.வாமதேவன்,உடையார்கட்டு சுதந்திரபுரம் கொலணி கிராம சேவையாளர் எம் அமிர்தராஜ், உடையார் கட்டு கிராம சேவையாளர் என்.உதயபவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-309)

## மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வன்னி உதயம் அமைப்பினர் உதவி வழங்கல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாலிநகர் பிரதேசத்தின் வன்னி உதயம் அமைப்பினரால் மு/ சிறாட்டிகுளம் அ.த.க பாடசாலைக்கு 600 அடி நீளமான நீர்க்குழாய்கள், பயிற்சிப் புத்தகங்கள், எழுது கருவிகள் போன்ற கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

முல்லை.மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் மிகக் குறைந்தளவு அடிப்படை வசதிகளோடு இயங்கி வரும் மு/சிறாட்டிகுளம் அ.த.க பாடசாலை மாணவர்களின் குடிநீர் மற்றும் கற்றல் செயற்பாடுகளை கருத்திற் கொண்டு வன்னி உதயம் அமைப்பினரால் மேற்படி உதவி வழங்கப்பட்டது.

அத்துடன் மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/குமாரசாமி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தற்காலிகமாக ஒவ்வொரு ஆசிரியர்களையும் இவ்வமைப்பு வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி உதயம் அமைப்பினர், பாடசாலை சமூகம், பெற்றோர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (2)

## எமது பூர்வீக நிலத்தில் மீளக்குடியேற்றுங்கள் கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

முல்லைத்தீவு மாவட்ட கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக்கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் ஜனாதிபதிக்கான மகஜரொன்றை கையளித்தனர். அம்மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயம் வருமாறு,

கேப்பாபிலவு பூர்வீக வாழ்விட மக்களாகிய நாம் எமது வாழ்விடம் எமக்கு தேவை என்பது தொடர்பாக பலமுறை ஊடகங்கள் மூலமாகவும் மகஜர்கள் மூலமும் நேர் காணல்கள் மூலமும் ஆர்ப்பாட்டங்கள்மூலமாகவும் அறியத்தந்தோம்.


145 குடும்பங்களை கொண்ட கேப்பாபிலவு கிராமமும் 59 குடும்பங்களை கொண்ட சூரிபுர கிராமமும் 55 குடும்பங்களைக் கொண்ட பிலவுக் குடியிருப்பு குடும்பங்களையும் சேர்த்து மொத்தமாக 259 குடும்பங்களை கொண்டது எமது கேப்பாபிலவு கிராமம்.இக்கிராமத்தில் 68 பேருக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் வழங்கப்பட்ட சுவர்ணபூமி காணி அத்தாட்சிப்பத்திரமுள்ளது.

அது மட்டுமின்றி எமது மூதாதையர்களின் பூர்வீக வழித் தோன்றல்களில் வாழ்ந்த பூர்வீக வாழ்விடத்தை பழைய அரசு இராணுவத் தேவைக்கு எடுத்த போதும் புதிய நல்லாட்சி அரசின் வாக்குறுதியின் படி தமது பூர்வீக வாழ்விடம் கிடைக்கும் என எதிர்பாத்த நாம் நல்லாட்சி அரசிலிருந்தும் ஒரு நல்ல முடிவு கிடைக்காததால் ஆறுமுகம் வேலாயுதபிள்ளை 24.03.2016 முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து எமது மக்களுக்கான ஒரு நல்ல முடிவு கிடைக்கும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக உறுதி கொண்டு கேப்பாபிலவு மாதிரி கிராம விநாயகர் ஆலய முன்றிலில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஆறுமுகம் வேலாயுதபிள்ளை அர்ப்பணிப்பால் நல்லாட்சி அரசு ஒரு நல்ல தீர்வு தரவில்லை என்றால் இவரால் இயலாத நிலை ஏற்பட்டால் அந்த இடத்தில் தொடர்ந்து உண்ணாவிரதமிருக்க பலர் உறுதி கொண்டுள்ளனர். இந்த நிலை தொடராது எமது பூர்வீக இடத்திலிருந்து ஏறக்குறைய 200 மீற்றருக்குள் அரச காணியுண்டு. நீங்கள் எம்மக்கள் மீதும் எமது எதிர்கால சிறார்கள் மீதும் கருணை கூர்ந்து எம்மை எமது பூர்வீக வாழ்விடத்தில் குடியமர்த்துமாறு தங்களை மன்றாட்டமாக வேண்டிக் கொள்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-281)

## கிளி.பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராயும் முக்கிய கூட்டம் கிளிநொச்சியில் நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயும் முக்கிய கூட்டமொன்று கடந்த 26 ஆம் திகதி காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேள் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது பாடசாலைகள் எதிர் கொண்டு வரும் ஆசிரியர்கள் பற்றாக்குறை,எதிர்காலத்தில் கல்வியில் ஏற்படப்போகும் பாதிப்புக்கள், மாணவர்கள்,ஆசிரியர்கள் ஆகியோரின் போக்குவரத்து பிரச்சினைகள், மாணவர்களின் ஒழுக்கம், பாடசாலைகளின் காணிகள் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ளமை போன்ற முக்கிய பிரச்சினைகளை பாடசாலைகளின் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

இக்கலந்துரையாடலில் கரைச்சி கோட்டத்திற்குட்பட்ட அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர்கள்,பழைய மாணவர் சங்கச் செயலாளர்கள்,பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்,வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம் ,சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி கோட்டக்கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-277)

## கொல்களத்தினால் சுகாதாரச் சீர்கேடு வேறு இடத்திற்கு அகற்றுமாறு கோரிக்கை

வவுனியா நகரசபைக்கு சொந்தமான மாடுகள் வெட்டும் கொல்களத்தினால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா யாழ் வீதி சோயோ ஒழுங்கையில் அமைந்துள்ள இக் கொல்களம் நகரசபைக்கு சொந்தமானதாக இயங்கிவருகின்ற நிலையில் குத்தகை அடிப்படையில் தனியார் ஒருவரினால் வவுனியா உட்பட கொழும்பு பிரதேசங்களுக்குமான மாடுகள் வெட்டப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் இப்பகுதி கடந்த சில நாட்களாக தூய்மை பேணப்படாமையினால் அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் அயலில் மக்கள் வசிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா நகர சபை செயலாளரிடம் கேட்டபோது இது தொடர்பாக பொது சுகாதார பரிசோதகரிடமே கேடகவேண்டும் என தெரிவித்திருந்தார்.


இந்நிலையில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் இருந்து இக் கொல்களத்தை அகற்றி மக்கள் நடமாட்டமற்ற பிரதேசத்திற்கு கொணடு செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோருவதுடன் துர்நாற்றம் வீசுவதை தடுக்க நகர சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்தெரிவிக்கின்றனர். (2-250)



கிளிநொச்சி பாரதிபுரத்தில் புலம்பெயர் வாழ் அன்பர் ஒருவரினால் எஸ்.கே.அறிவுச்சோலை சிறுவர் இல்லம் நேற்றுக் காலை 9 மணியளவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்,யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ,வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் எஸ்.விசாகரூபன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைத்த போது... (படங்கள்:-கிளிநொச்சி- 1 செய்தியாளர்)









மன்னாரில் நேற்று நடைபெற்று முடிந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சியப்பதிவுகள்.(படங்கள்:-உ.சாளின், பனிக்கன்குளம் செய்தியாளர்)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை வவுனியா செயலகத்தில் இன்றும் நாளையும்

(குருமன்காடு)

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன் கிழமையும் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது காணாமல் போனமை தொடர்பில் பதிவுகளை மேற்கொண்டவர்களை சாட்சியமளிக்க வருமாறு காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் கடிதங்களை அனுப்பியுள்ளனர். இதன்படி காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளதாகவும், கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்களை வருகை தந்து சாட்சியங்களை வழங்குமாறும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-250)

## முச்சக்கரவண்டி-மோ.சைக்கிள் விபத்து; ஆசிரியர் உயிரிழந்தார்

(யோகபுரம்)

முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.30மணியளவில் மாங்குளம்-துணுக்காய் வீதியிலுள்ள வடகாட்டு பகுதியில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம் கரணவாய் பகுதியில் வசிக்கும் நடராசா சுஜீபன்(வயது-28) என்ற மு/பெரிய புளியங்குளம் அ.த. க.பாடசாலையில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியரே மரணமடைந்த வராவார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது, முல்லைத்தீவு வடகாட்டுப்பகுதியில் மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியும் வடகாட்டில் இருந்து மல்லாவி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்திலேயே இப்பரிதாப சம்பவம் சம்பவித்துள்ளது.

சம்பவம் அறிந்த மல்லாவி பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து சடலத்தை மீட்டு மல்லாவி வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்ததோடு முச்சக்கர வண்டி சாரதியைக் கைது செய்து


### சாரதி கைது

பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அதேவேளை இருவாகனங்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

மேலதிக விசாரணையை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-306)




## வவுனியாவிற்கு சிஹள அமைப்பினர் வருகை; சிங்கள மக்களை சந்தித்து உதவித்திட்டங்கள்



வவுனியா பிரதேசத்திற்கு சிஹள அமைப்பினர் வருகை தந்து பெரும்பான்மை இன மக்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளதுடன், அவர்களுக்கான உதவித் திட்டம் ஒன்றினையும் ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா, அவுரந்துலாவ பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் சிஹள அமைப்பின் தலைவர் ஜம்துரே சாந்ரரட்ண தேரர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்து அப்பகுதியில் குடியிருக்கும் பெரும்பான்மை இன மக்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

அதன்பின்னர் அப்பகுதியில் சிஹள அமைப்பின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கான சுகாதார வைத்திய நிலையம் ஒன்றினையும் திறந்து வைத்தனர். அத்துடன் அப்பகுதியில் வாழும் விசேட தேவைக்குட்பட்டோர், வறுமைக்கோட்டிற்குட்பட்டோர், பன்சாலையில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் எனப் பலருக்கும் பல்வேறு விதமான உதவித் திட்டங்களை வழங்கி வைத்துள்ளனர்.

கடும் போக்கு கொள்கையுடன் தென்பகுதியில் உருவாகியுள்ள சிஹள அமைப்பின் முதலாவது வடபகுதி பயணமாக இது அமைந்திருந்தது. இதேவேளை, அண்மையில் வடபகுதியின் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவின் கலாபேபஸ்வேவ போன்ற பகுதிகளுக்கு பொதுபலசேனா அமைப்பின் ஞானசார தேரரும் வருகை தந்து அங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்து கருத்துக்களை அவர்களிடம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## உருத்திரபுரம் போதனாசிரியர் பிரிவில் அரைமானிய அடிப்படையில் பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்கள்

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தின் பீ.எஸ்.டீ.ஜீ திட்டத்தின் கீழ் உருத்திரபுரம் போதனாசிரியர் பிரிவில் அரைமானிய அடிப்படையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நெல் உற்பத்திக்கு 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் விதம் வழங்கப்படும்.

விதை நெல் உற்பத்தி செய்வதற்கு 15 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருக்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

பயறு உற்பத்திக்கு 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படும். சோயா உற்பத்திக்கு 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படும். வெங்காய உற்பத்திக்கு 3 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் 1/2 ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

அடர் செறி மாமரச் செய்கைக்கு 3 பயனாளிகள் தெரிவு செய்யப் பட்டு ஒவ்வொருபயனாளிகளுக்கும்தலா80 மாமரக் கன்றுகள் வழங்கப்படும்.

கொடித்தோடைப் பயிர்ச்செய்கைக்கு 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் 1/4 ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

அன்னாசிப் பயிர்ச்செய்கைக்கு 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் 1/4 ஏக்கர் வீதம்வழங்கப்படும்.வாழைப்பழச்செய்கைக்கு ஒரு பயனாளி தெரிவு செய்யப்பட்டு1/4 ஏக்கர்வீதம் வழங்கப்படும். வெங்காய சேமிப்புக் கொட்டிலுக்கு ஒரு பயனாளி தெரிவு செய்யப்படுவார்.

வீட்டுத்தோட்டப் பழமரச் செய்கைக்கு 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தலா ஒவ்வொரு பயனாளிகளுக்கும் நெல்லி கன்று இரண்டு கொய்யாக்கன்று இரண்டு, மாதுளைக் கன்று இரண்டு, ஒட்டுப் பலாக்கன்று இரண்டு, முருங்கைக்கன்று இரண்டு, தென்னங்கன்று இரண்டு தேசிக்கன்று இரண்டு, ஜம்புக்கன்று இரண்டு என்பன வழங்கப்படும். சேதன நெல் உற்பத்திக்கு 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

இத்திட்டத்தைப் பெறவிரும்பும் பயனாளிகள் தங்கள் பெயர் விபரங்களை வாரத்தில் புதன்கிழமைகளில் உருத்திரபுரம் கமநலசேவை நிலையத்திலுள்ள விவசாயப் போதனாசிரியர் பிரிவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு விவசாயப் போதனாசிரியர் அறிவித்துள்ளார். மேலதிக தகவல் தேவைப்படுவோர் 0767641611 என்னும் தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

## முரண்பாட்டை சமரசம் செய்ய முயன்ற பொலிஸ் மீது தாக்குதல்

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை சமரசம் செய்து வைத்து தடுக்க முற்பட்ட பொலிஸார் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் அவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பூம்புகார் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது. இதன்போது இரு இளைஞர்கள் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பாக மாறியது. இதன்போது அங்கு கடமையில் நின்ற ஈச்சங்குளம் பொலிஸார் குறித்த முரண்பாட்டை சமரசம் செய்து வைத்து தடுக்க முற்பட்ட வேளை பொலிஸார் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இதனால் பொலிஸார் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனா. எனினும் இதுவரை எவரும் கைதாகவில்லை. (2-250)

## கடும் வெப்பநிலைத்தாக்கத்தினால் நீர் நிலைகளின் நீர் மட்டம் குறைகிறது

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியான கடும் வெப்பத்துடனான காலநிலை நிலவி வருகின்றது. இதனால் மக்களின் அன்றாட செயற்பாடுகளிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது, அதிக வெட்பம் காரணமாக பல்வேறு நோய் தாக்கங்களிற்கு மக்கள் முகம் கொடுத்து வருவதுடன், உடல் வெப்பத்தினை தணிக்க இளநீர், பழங்களை அதிகம் சேர்த்து வருகின்றனர். இதேவேளை இளைஞர்கள் நீர் நிலைகளிற்கு சென்று நீராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மைய சில நாட்களாக தொடரும் வெப்ப நிலை காரணமாக மாவட்டத்தின் நீர்நிலைகளின் நீர்மட்டம் குறைவடைந்து வருகின்றது. இதேவேளை இரணைமடு குளம் புனரமைப்பிற்காக நீர் திறந்து விடப்பட்டுள்ளமையால், நிலத்தடி நீரின் அளவும் குளத்தை அண்டிய பகுதிகளில் குறைவடைந்து வருகின்றது,

விலங்குகள் வெப்பம் காரணமாக நீர் அருந்துவதற்காக நீர் நிலைகளை நாடுகின்றன. இதேவேளை முதலாம் தவணை பரீட்சைகள் ஆரம்பித்துள்ள நிலையில் பாடசாலைகளில் மாணவர்கள் பல்வேறு இடர்ளை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டில் நிலவும் வெப்பம் மேலும சில நாட்களிற்கு தொடருமாயின் பல்வேறு நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படவுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (2-15)



# கோத்தாவை பிரதமராக்க மைத்திரி விரும்பினார்



## மகிந்த எதிர்த்தார்–எஸ்.பி.



(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின போது பிரதமர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை நிராகரித்ததாக அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்லேதலவின்ன ரதன ஜோதி தர்ம வித்தியாலயத்தில நேற்று முன்தினம்மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன்றைப் பெற்றுக்கொடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடையே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த அரசாங்கத்தின் போது விருப்பம் தெரிவித்திருந்தார்.

எனினும், இந்த யோசனைக்கு மகிந்த ராஜபக்ஷவே முதலில் எதிர்ப்பு தெரிவித்ததாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# காட்டு யானைகளின் தாக்குதலால் சேதம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு மற்றும் பட்டிபளை பிரதேச செயலக பிரதேசங்களுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை காட்டு யானைகளின் தாக்குதல்கள் காரணமாக மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் விவசாயப் பயிர்களும் அழிக்கப்பட்டுள்ளன.

வவுணதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பன்சேனையில் ஒரு வீடும் நல்லதண்ணி ஓடையில் ஒரு வீடும் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை, வாளாவட்டையில் ஒரு வீடும் சேதமடைந்துள்ளதாகவும் பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்ல தண்ணி ஓடையில் உள்ள வீட்டினை உடைத்து அங்கு சிறுபோக செய்கைக்காக வைத்திருந்த விதை நெல்லை காட்டு யானை உட்கொண்டு விட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பயிர் நிலங்களையும் சேதப்படுத்தியுள்ளதுடன் வீட்டுத்தோட்டங்களையும் சேதப்படுத்தியுள்ளதாக பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

பன்சேனையில் வீடு ஒன்றை யானை உடைத்தபோது அந்த வீட்டில் தங்கியிருந்த வயோதிப பெண்கள் இருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்ற கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார். (இ)



# 220 நிதி ஆவணங்களை காணவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல

(கொழும்பு)

மிக முக்கியமான 220 நிதி ஆவணங்களை காணவில்லை என்ற நிதி அமைச்சரின் கருத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்குபெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் உயர் அதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆவணங்கள் தொலைந்து போக எவ்வித காரணங்களும் கிடையாது.

அரசாங்கத்தின் முக்கிய திட்டங்கள் பற்றிய ஆவணங்கள் ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருக்காது.

வெளிவிவகார வா திணைக்களம், திறைசேரி கட்டுப்பாட்டுத் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற இடங்களில் இந்த ஆவணங்களின் பிரதிகள் பேணப்பட்டிருக்கும்.

இவ்வாறு அனைத்து இடங்களிலும் இந்த நிதி அறிக்கைகள் காணாமற் போயிருக்க வாய்ப்பில்லை என முன்னாள் சிரேஷ்ட அரசாங்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் முக்கிய திட்டங்கள் குறித்த 220 ஆவணங்கள் காணாமற்போயுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பொலிஸ் சேவையை மக்கள் நட்புடைய சேவையாக மாற்றுவதே அரசின் நோக்கம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

பொலிஸ்சேவையை உண்மையான மக்கள் நட்புடைய சேவையாக ஆக்குவதே புதிய அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பொலநறுவையில் ஜனாதிபதி அலுவலகம், சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியன இணைந்து மேற்கொள்ளும் ஒன்றிணைந்த பொலிஸ்நடமாடும்சேவையின் முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குற்றங்களை ஒழித்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழித்தல், போதைப்பொருள் ஒழிப்பு, வீதிப்பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை பிள்ளைகளுக்கு அறிவூட்டுதல் போன்ற நிகழ்வுகளும் இந்த பொலிஸ் நடமாடும் சேவையுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. சூழல் பாதுகாப்பு மற்றும் சுத்தம் தொடர்பான வேலைத்திட்டங்களும் குற்றங்களை ஒழிப்பது தொடர்பில் சிவில் பாதுகாப்பு குழுக்களைப் பலப்படுத்துதல் போன்ற நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டதோடு, இது வரையில்தீர்க்கப்படாத முறைப்பாடுகளை விசாரித்தல் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை யாளரகளை உடனடியாக சுற்றிவளைத்து கைது செய்தல் போன்ற விடயங்களும் இந்த நடமாடும் சேவையில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, மக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே ஒரு நெருங்கிய தொடர்பைக் கட்டியெழுப்புவதனூடாக மிகவும் வினைத்திறன்மிக்கதோர் சேவையை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

மக்களுடன் மிகவும் நெருங்கிச் செயற்படும் சகல அரச நிறுவனங்களும் புகழப்படுவதும் விமர்சிக்கப்படுவதும் சாதாரணமான ஒரு நடைமுறை என்பதோடு சில சந்தர்ப்பங்களில் எவ்வாறு விமர்சிக்கப்பட்டபோதும் மனித சமூகத்தின் சிறப்பான இருப்புக்கு சட்டமும் ஒழுங்கும் நடைமுறைப்படுத்துவது எமது பொலிஸ் திணைக்களம் நிறைவேற்றிவரும் ஒரு முக்கிய பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-5)

# மன்னிப்புக் கோரிய பேஸ்புக் நிறுவனம்



சமூக வலைத்தளமான பேஸ்புக் நிறுவனம் சர்வதேச ரீதியில் மன்னிப்புக் கோரியுள்ளது.

பேஸ்புக் நிறுவனம் அறிமுகப்படுத்திய safety Check நேற்று முன்தினம் சில மணி நேரம் இயங்காமல் போனமைக்காகவே குறித்த நிறுவனம் மன்னிப்புக் கோரியுள்ளது.

குறிப்பாக திடீர் அசம்பாவிதங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அப்பகுதியின் பேஸ்புக் பாவனையாளர்களுக்கு safety Check Notifications அது தொடர்பான அறிவித்தல் விடுக்கும்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பாகிஸ்தான்-லாகூர் வெடிப்பு சம்பவ நேரத்தில் அப்பகுதியின் பேஸ்புக் பாவனையாளர்களுக்கு safety Check இயங்காமல் போயிருந்துள்ளது.

இதனால் பேஸ்புக் பாவனையாளர்களின் அதிருப்தியினை தொடர்ந்து பேஸ்புக் நிறுவனமானது மன்னிப்புக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:24செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:HNDE/தனியார் தொழில்<br>தொ.இ: B/4022 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 52செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4843 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc, PHD/ உதவி விரிவுரையாளர்<br>தொ.இ: B/4024 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4844 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31செவ் 2 இல<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4028 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/4850 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 40செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்A/Lகனடா குடியுரிமை<br>தொ.இ: B/4029 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 50செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/4854 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# துறைமுக அபிவிருத்தி திட்டத்தை நிறுத்தினால் 30 மில்.டொலர் மாதம் செலுத்த வேண்டிவரும்

(கொழும்பு)

**கொழும்பு துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நிறுத்தினால் ஒப்பந்தத்தை முறித்தமைக்காக மாதாந்தம் 30 மில்லியன் டொலருக்கும் அதிகம் சீன கம்பனிக்கு நட்டஈடு கொடுக்க வேண்டி ஏற்படும். அததுடன் ஒப்பந்தத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்பை மீறுகின்றன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நிறுத்துவதாக தேர்தலுக்கு முன்னர் கூறியிருந்தீர்கள். என்றாலும் ஒரு வருடத்துக்கு பின்னர் மீண்டும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கப்போகின்றீர்கள்.வேலை தொடர்ந்து நடைபெற்றிருந்தால் அதிகளவு நிறைவடைந்திருக்கும் அல்லவா? என ஜனாதிபதியிடம் கேளுங்கள்" எனும் செயற்றிட்டத்தில் நபர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்விக்கு ஜனாதிபதி அளித்துள்ள பதிலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக இலங்கை சீன ஒப்பந்தத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. சில சரத்துக்கள் எமது அரசியலமைப்பை மீறுகின்றன. அதனால் அந்த ஒப்பந்தத்தை திருத்தியமைக்க வேண்டும் என நாங்கள் தொடர்ந்து கூறிவந்துள்ளோம். அத்துடன் இந்த ஒப்பந்தத்தை நாங்கள் முற்றாக நிராகரித்தால், ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள முறையின் பிரகாரம் ஒப்பந்தத்தை முறித்த குற்றத்துக்காக இலங்கை அரசாங்கம் வேலைத்திட்டத்தை மேற்கொள்ளும் சீன கம்பனிக்கு 30, 35 மில்லியன் அமெரிக்க டொலர்களை மாதாந்தம் செலுத்த வேண்டும.

30,35 மில்லியன் டொலர் என்பது பாரிய தொகையாகும். இந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டால் அடுத்துவரும் நூற்றுக்கணக்கான வருடங்கள் அதனை நாங்கள் செலுத்த வேண்டிவரும்.

கடந்த அரசாங்கத்தில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் பிரதானமாக இந்த தவறை விட்டிருக்கின்றனர். அத்துடன் இது அரசியலமைப்புக்கும் முரணானதாகும்.

ஒப்பந்தத்தின் சரத்துக்களை சரியாக வாசிக்கவில்லை என்றால், வாசிக்காமலா, அல்லது இந்த சரத்தை நுழைத்துவிட்டு தெரியாது போன்று இருந்தார்களா என்ற காரணத்தையும் தேடிப்பார்க்க வேண்டும்.

ஒப்பந்தம் கைச்சாத் திடும்போது குறிப்பாக இலங்கை அரசின் சாரபில் அந்த பொறுப்பு சரியான முறையில் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## காலை நேர உடற்பயிற்சி சிறந்ததா?

இந்த கால இளைஞர்கள் வேலையைக் காரணம் காட்டி உடற்பயிற்சி செய்யாமல் தவிர்க்கிறார்கள். இதனால் பிற்காலத்தில் உடலில் ஏற்படும் பிரச்சினைகளை பற்றி கவலைப்படுவதில்லை.

தற்போதுள்ள காலகட்டத்தில் வேலைமுறையை மாற்ற முடியாத சூழலில், குறைந்தபட்சம் தினமும் அரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்யுங்கள்.

சுகாதாரமான சூழலில் நல்ல காற்றை சுவாசித்து, தளர்வான உடைகள் அணிந்து அரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

மாலையில் கூடுதலாக வேண்டுமானால் உடற்பயிற்சி செய்து கொள்ளலாம். அதற்காக, காலை உடற்பயிற்சியைத் தவிர்க்கக் கூடாது.

Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்

மாலை உடற்பயிற்சியில் அன்றைய தினம் சாப்பிட்ட கலோரிகளைதான் எரிப்போம். ஏற்கனவே உடலில் சேர்ந்திருக்கும் கலோரிகளை எரிப்பதற்கு காலை வேளை உடற்பயிற்சியே சிறந்தது.

முக்கியமாக, அடைத்து வைக்கப்பட்ட அறைக்குள், பலருடன் கூட்டாக உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

தினமும் 30 நிமிடம் காலை, மாலை இருவேளை உடற்பயிற்சி செய்வது உடலுக்கும் ஆரோக்கியத்தைத்தரும்.



இருவேளை உடற்பயிற்சி செயய முடியாதவர்கள் காலை மட்டும் செய்யலாம். வேலை காரணமாக காலையில் உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் மாலையில் செய்யலாம்.

வாரம் முழுவதும் பயிற்சி செய்ய முடியாதவர்கள் வாரத்தில் 5 நாட்கள் உடற்பயிற்சி செய்யலாம்.

### சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க

# புதிய சட்டமூலம் கொண்டு வருவது பாராட்டத்தக்க விடயமாகும்-டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

ஆபாச வெளியீடுகள் தொடர்பான 1883 தண்டனைச் சட்டக் கோவை மற்றும் 1983 சட்டத்தால் திருத்தப்பட்ட 1927 ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்திலுள்ள சட்ட ஏற்பாடுகள் தற்காலத்துக்கு ஏற்றவாறு போதியதாக இல்லாததன் காரணமாக, தற்போதைய காலத்திற்கு ஏற்றவாறு புதிய சட்ட மூலம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்திருப்பதானது வரவேற்கத்தக்கதென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம்,

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ள ஒரு காலகட்டத்தில் இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் முக்கியமானவை.

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தூண்டுகின்ற பல்வேறு விடயங்கள் நவீன தொழில்நுட்ப புரட்சியுடன் வெகுவாக அதிகரித்துள்ளதொரு காலநிலையில் அதற்கேற்ற வகையிலான சட்ட ஏற்பாடுகள் எமக்கு அவசியமாகின்றன.

இதனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும், இந்த அரசுக்கும் எமது மக்கள் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சர்வதேச போதை மாத்திரை வர்த்தகத்துடன் தபால் திணைக்கள அதிகாரிகளுக்கு தொடர்பு

சர்வதேச போதை மாத்திரை வர்த்தகத் துடன் தபால் திணைக்கள அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பு உண்டு என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடு களின் ஊடாக சிலர் மேற்கொண்டு வரும் சர்வதேச போதை மாத் திரை வர்த்தகத்துடன் தபால் திணைக்களத்தின் சிலருக்கு தொடர்பு உண்டு என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு மேலதிக நீதவான் சந்தன கலங்சூரியவிற்கு அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதியொன்று சுங்கப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாது உரிய கிரம விதிகளுக்கு புறம்பாக அதிவேக தபால் மூலம் விநியோ கம் செய்யப்பட்டுள்ளதாக விசார ணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

போதை மாத்திரை வர்த்தகம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனையில் நடத்தப்பட்ட சோதனையின் போது, போதை மாத்திரைகள் தபால் பொதியூடாக விநியோகம் செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது என புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் பிரஜை ஒருவரை கைது செய்துள்ளதாகவும் அவரிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் பெருந்தொகை போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கைதான பாகிஸ்தான்பிரஜையான மொஹமட் இர்பான் எதிர்வரும் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீத வான் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# லாகூர் தற்கொலைத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 70 பேர் பலி!

(லாகூர்)

**பாகிஸ்தானில் லாகூர் நகரிலுள்ள பூங்கா ஒன்றில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் 29 சிறுவர்கள் உட்பட 70 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.**



சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த பூங்காவுக்கு அருகில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பூங்காவில் பல குடும்பங்கள் ஈஸ்டர் ஞாயிறு நிகழ்வுகளை கொண்டாடிக்கொண்டிருந்தன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சிறுவர்கள்.பெரியோர்கள் என பலர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


இத்தாக்குதலுக்கு பாகிஸ்தானிய தலிபான்களின் ஒரு பிரிவினர் பொறுப்பேற்றுள்ளனர்.

லாகூர் நகரிலுள்ள கிறிஸ்தவர்களை தெரிந்தே தாம் திட்டமிட்டு இலக்குவைத்து தாக்கியதாகவும் ஜமாத்-உல்-அஹ்ரார் அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் நினைவாக பஞ்சாப் மாகாணத்தில் மூன்று நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பிரதமர் நவாஸ் ஷெரீப் பிரிட்டனுக்கான தமது பயணத்தை ஒத்தி வைத்துள்ளார். (இ-5)

## பல்மைரா நகரம் மீட்பு; பான் கீ மூன் வரவேற்பு



சிரியாவின் வரலாற்று சிறப்புமிக்க புராதன நகரமான பல்மைராவை ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து சிரியா படைகள் கைப்பற்றியுள்ளன.

இங்குள்ள வரலாற்று சிறப்புமிக்க பல பழங்கால நினைவுத் தூண்களையும், நினைவுச் சின்னங்களையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த சில மாதங்களாக அழித்தொழித்து நாசப்படுத்தி வந்தனர். எஞ்சியிருக்கும் சில கலைப் பொக்கிஷங்களையாவது காப்பாற்றும் நோக்கத்தில் அரசுக்கு ஆதரவான போராளி குழுக்களுடன் ஒன்றிணைந்து இங்கு ஆதிக்கம் செலுத்திவந்த ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் சிரியா இராணுவத்தினர் மூர்க்கமாக போரிட்டு வந்தனர்.

பல்மைரா நகரின் கிழக்கு நுழைவாயில் வழியாக முன்னேறிச் சென்ற அரசுப் படைகள், அங்கிருந்த தீவிரவாதிகளை புறமுதுகிட்டு ஓடவைத்து பல்மைரா நகரை முழுமையாக கைப்பற்றியுள்ளதாக அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், ஐ.எஸ் தீவிரவாதிகளிடம் இருந்து பல்மைரா நகரம் மீட்கப்பட்டதற்கு ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள மக்கள் இதுபோன்ற தங்களது மனித குலத்திற்கு சொந்தமானவற்றை பாதுகாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக பல்மைரா நகரம் மீட்கப்பட்டதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வாழ்த்துக்களை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## குற்றவாளிகளை கண்டுபிடிக்க பாக். இராணுவத்தினர் தீவிரம்

பாகிஸ்தானின் லாகூரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையன்று நடந்த தற்கொலை குண்டுத் தாக்குதலில் எழுபதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பொறுப்பானவர்களை தேடிபிடிக்க தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று பாகிஸ்தான் இராணுவம் உறுதி அளித்துள்ளது.

பல குடும்பங்கள் இருந்த பூங்கா ஒன்றில் குண்டு வெடித்ததில் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் தலிபான் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஜமாத் உல் அஹ்ரர் என்ற அமைப்பு இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. ஈஷ்டர் பண்டிகை கொண்டாட்டங்களின்போது லாகூரின் கிறிஸ்தவ சிறுபான்மையினரை இலக்கு வைத்ததாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. காயமடைந்த சிலரை வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்ட பிரதமர் நவாஸ் ஷெரிப், இதற்கு பதில் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்தித்தார்.

இந்தத் தாக்குதலையடுத்து. பஞ்சாப் மாகாணத்தில் மூன்று நாட்கள் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 29 சிறார்கள் உட்பட 70இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.(இ-5)

## சினாய் பகுதியில் மோதல்; 19 கிளர்ச்சியாளர்கள் பலி!

எகிப்தின் வடக்கு சினாய் மாகாணத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அந்நாட்டு இராணுவம் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது 19 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.


இது குறித்து அந்நாட்டில் இருந்து வெளிவரும் "அல்-அஹ்ரம்' நாளிதழ் நேற்று அறிவித்துள்ளது.

சினாய் மாகாணம், ஷேக் ஜுவெய்த் நகருக்கு அருகேயுள்ள அல்-கோரா கிராமத்தில் இராணுவத்தினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, அங்கு பதுங்கியிருந்த கிளர்ச்சியாளர்கள் இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதைத் தொடர்ந்து, இராணுவத்தினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற கடும் துப்பாக்கிப் பிரயோகத்தில் 9 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ள னர்.

இதேவேளை, அபு தவீலா என்ற கிராமத்தில் இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 10 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையே, கிளர்ச்சியாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அல்-அஹ்ரம் நாளிதழ் மேலும் கூறியுள்ளது. (இ-5)

## தீவிரவாதத்திற்கு எதிராக அன்பை ஆயுதமாக ஏந்துங்கள்

### போப் பிரான்சிஸ் வேண்டுகோள்



இயேசு கிறிஸ்து உயிர்த் தெழுந்த நாளை ஈஸ்டர் திருநாளாக கிறிஸ்தவர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில். ஈஸ்டர் தினத்தன்று வாடிகனில் போப் பிரான்சிஸ் தலைமையில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

இதில் உலகம் முழுவதும் இருந்து பல்வேறு நாட்டு கிறிஸ்தவ தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது பிரஸல்ஸ் தற்கொலைப் படை தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் பேசிய போப் பிரான்சிஸ், உலகின் பல பகுதிகளில் தீவிரவாத அச்சுறுத்தல்கள், அநியாயங்கள், வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து வருத்தம் தெரிவித்தார்.

குறிப்பாக, ஈராக், ஐவரிகோஸட், கேமரூன், சாட், நைஜீரியா, துருக்கி மற்றும் பெல்ஜியம் ஆகிய பகுதிகளில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதல்களை சுட்டிக் காட்டினார். கடவுள் மரணத்தையும், சுயநலத்தையும் அன்பு எனும் ஆயுதங்களை கொண்டு வீழ்த்தினார்.

அதைபோல தீவிரவாதத்திற்கு எதிராக போராட அன்பை ஆயுதமாக ஏந்த வேண்டும் என்றார்.

ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்ததால் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்திற்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. (இ-5)

## 2 நாய்க்குட்டிகள் ஒருகோடி ரூபாய்

(பெங்களூர்)

பெங்களூர் பனசங்கரியில் வசித்து வருபவர் சதீஷ். தொழில் அதிபரான இவர் நாய்கள் வளர்ப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர். இவர், ஒரு கோடி ரூபாவுக்கு சீனா தலைநகர் பீஜிங்கில் இருந்து 'கொரியன் தோசா மஸ்தீப்' என்ற இனத்தை சேர்ந்த பிறந்து 2 மாதங்கள் மட்டுமேயான 2 நாய்க்குட்டிகளை வாங்கியுள்ளார்.

இந்த நாய்க்குட்டிகள் பீஜிங்கில் இருந்து விமானம் மூலம் டில்லி வழியாக பெங்களூர் கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டன. விமான நிலையத்தில் வந்து இறங்கிய நாய்க்குட்டிகளை சதீஷ் ஆர்வமுடன் வரவேற்று கொஞ்சினார். அப்போது, ஒரு நாய்க்குட்டிக்கு உடல்நல குறைபாடு இருப்பது தெரியவந்தது.

பின்னர், அந்த நாய்க்குட்டிகளை தனது வீட்டுக்கு கொண்டு சென்ற சதீஷ் அருகே உள்ள கால்நடை டாக்டரிடம் நாய்க்குட்டிகளை காண்பித்தார். டாக்டர் நாய்க்குட்டிகளை பரிசோதனை செய்தார்.

சீனாவில் இருந்து இந்தியா வந்த இந்த நாய்க்குட்டிகள் காண்போரை கவர்ந்து இழுக்கும் வகையில் உள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த நாய்க்குட்டிகள் குளிர் பிரதேசங்களில் வளரக் கூடியது என்பதால் இதற்கென சிறப்பு வசிப்பிடத்தை ஏற்படுத்தி கொடுக்க சதீஷ் முடிவு செய்துள்ளார். தொழில் அதிபர் சதீஷ் 2 நாய்க்குட்டிகளை ஒரு கோடிக்கு வாங்கிய சம்பவம் கர்நாடக மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. (இ-5)


# ஆப்கானில் இந்தியா கட்டிக் கொடுத்த நாடாளுமன்ற கட்டடம் மீது தாக்குதல்

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் இந்தியா கட்டிக் கொடுத்த புதிய நாடாளுமன்ற கட்டடம் மீது தாக்குதல் நடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அண்மையில் ரூ.152 கோடி மதிப்பில் அந்நாட்டு நாடாளுமன்ற கட்டடத்தை இந்தியா கட்டிக் கொடுத்தது.


இதை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.



இந்நிலையில், இந்த புதிய கட்டடம் மீது நேற்று தலிபான்கள் ரொக்கெட்டுகளை கொண்டு தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதல் சேத விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை. இந்திய பிரதமராக பிரதமர் மோடி பதவியேற்றது முதல் ஆப்கானில் இந்திய தூதரகங்கள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். (இ-5)

# கேமரூனில் தாக்குதல் நடத்த திட்டம் மனித வெடிகுண்டு மாணவி கைது!



2014 ஆம் ஆண்டு நைஜீரியா நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள சிபோக் நகரில் போகோஹரம் தீவிரவாதிகள் ஒரு பாடசாலை புகுந்து 270 மாணவிகளை கடத்திச் சென்றனர். இவர்களில் 50 பேர் தீவிரவாதிகளின் பிடியில் இருந்து தப்பிவிட்டனர். மற்றவர்கள் இன்னும் தீவிரவாதிகளின் பிடியில்தான் உள்ளனர். இந்த மாணவிகளில் ஒருவரை தீவிரவாதிகள் மனித வெடிகுண்டாக பயன்படுத்த திட்டமிட்டு இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

அண்மையில் நைஜீரியாவின் அண்டை நாடான கேமரூன் தலைநகர் யோன்டேயில் சந்தேகத்தின்பேரில் ஒரு பெண்ணை பொலிஸார் பிடித்து விசாரித்தனர்.

அவரிடம் இருந்து ஏராளமான வெடிமருந்து பொருட்களும் கைப்பற்றப்பட்டன. அவரிடம் துருவித் துருவி விசாரணை நடத்தியதில், அவர் போகோஹரம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மாணவிகளில் ஒருவர் என்பதும் அவரை தீவிரவாதிகள் மனித வெடிகுண்டாக பயன்படுத்த மூளைச் சலவை செய்து இருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து அந்த மாணவியை பொலிஸார் கைது செய்தனர்.

இதுபற்றி கேமரூன் அரசு நைஜீரியாவுக்கு தகவல் தெரிவித்தது. இதைத்தொடர்ந்து அவர் தங்களது மகள்தானா என்பதை உறுதி செய்ய அந்த மாணவியின் பெற்றோரை கேமரூன் நாட்டுக்கு நைஜீரியா அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# லாகூர் தாக்குதலுக்கு மோடி கடும் கண்டனம்

(புதுடில்லி)


பாகிஸ்தானின் லாகூரில் உள்ள குல்சான்-ஐ-இக்பால் பார்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயங்கர குண்டுவெடிப்பு தாக்குதல் சம்பவத்தில் 69 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

200இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், தாக்குதல் சம்பவத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கு தொலைபேசி மூலம் மோடி இரங்கல் தெரிவித்தார்.

இந்த உரையாடலின் போது, தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் எந்தவிதமான சமரசமும் செய்து கொள்ளக்கூடாது என்பதை மோடி வலியுறுத்தினார்.



மேலும், அப்போது வெடிகுண்டு தாக்குதலுக்கு பலியானோர் குடும்பங்களுக்கு அவர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தார்.

இந்த தகவலை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கூறியுள்ளது. (இ-5)

# ஹெலிகொப்டர் விபத்தில் 12 இராணுவத்தினர் பலி



(அல்ஜீரியர்ஸ்)

வடக்கு ஆபிரிக்காவின் அல்ஜீரியா நாட்டில் நேற்று முன்தினம் நிகழ்ந்த ஹெலிகொப்டர் விபத்தில் 12 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இருவரது நிலைமை கவலைக்கிட மாக உள்ளது.

அல்ஜீரியாவின் பாதுகாப்பு துறை அமைச்சகம் இந்த தகவலை தெரிவித்துள்ளது.

சகாரா என்ற பகுதியில் உளவுப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்பட்டுள்ளது.

ஆத்ரார் மற்றும் ரெக்கன் என்ற இரு நகரங்களுக்கு இடையில் டாமன்ராஸ்செட் என்ற பகுதியில் ஹெலிகொப்டர் சென்று கொண்டிருந்த போது இயந்திர கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டதாக பாதுகாப்பு துறை அமைச்சகம் தெரிவித்தது.

இருப்பினும், விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ள அல்ஜீரியா விமானப் படைத்தளபதி உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# மும்பை விமானத்தில் புகை காரணமாக 120பயணிகள் அவசரமாக வெளியேற்றம்

(மும்பை)

ஐதராபாத்தில் இருந்து நேற்றுக் காலை மும்பைக்கு வந்த ஏர் இந்தியா விமானத்தில் திடீரென புகை கிளம்பியதால் அதில் வந்த 120 பயணிகளும் அவசரவழி வாயிலாக வெளியேற்றப்பட்டனர்.

ஏர் இந்தியா நிறுவனத்துக்கு சொந்தமான அந்த விமானம் நேற்றுக் காலை 7.20 மணியளவில் மும்பையில் தரையிறங்கியது. ஓடுபாதை வழியாக ஊர்ந்து சென்று பயணிகளை இறக்கிவிடும் இடத்தை நோக்கி நகர்ந்தபோது, இயந்திரப் பகுதியில் இருந்து திடீரென புகை எழுந்ததை கண்டு பதற்றமடைந்த விமானி, இதுபற்றி கட்டுப்பாட்டு அறைக்கு அவசர தகவல் அளித்தார்.

உடனடியாக, மீட்புப் படையினருடன் தீயணைப்பு வாகனங்கள் அந்த விமானத்தை நோக்கி விரைந்து வந்தன.

விமானத்தில் இருந்த 120 பயணிகள் மற்றும் விமானி உள்ளிட்ட ஆறு சிப்பந்திகள் அவசர 'சூட்' வழியாக கீழே இறக்கப்பட்டனர். பின்னர், விமானத்தினுள் சென்று



பார்த்தபோது புகை அடங்கிப்போய் இருந்தது. இச்சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். (இ-5)

# மல்லையாவுக்கு ஜேட்லி எச்சரிக்கை

வங்கிகளிடம் வாங்கிய கடனை கௌரவமான முறையில் திருப்பிச் செலுத்தாவிட்டால் கடும் நடவடிக்கைகளை சந்திக்க வேண்டியிருக்கும் என விஜய் மல்லையாவுக்கு நிதியமைச்சர் அருண் ஜேட்லி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டில்லியில் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், வங்கிகளில் பணத்தை திருப்பிச் செலுத்தாமல் மோசடி செய்துள்ள மல்லையா போன்ற தொழிலதிபர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய கடன் பாக்கிகளை கௌரவமான முறையில் திருப்பிச் செலுத்துவதே நல்லது. இல்லையேல் வங்கிகளும், புலன்விசாரணை அமைப்புகளும் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார்.

விஜய் மல்லையா, பாரத ஸ்டேட வங்கி உட்பட 17 வங்கிகளிடம் வாங்கிய 9ஆயிரம்கோடி ரூபாய் கடனை திருப்பி செலுத்தாமல் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

விஜய் மல்லையா விவகாரத்தில், சாத்தியமாகக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஏற்கனவே நாடாளுமன்றத்திலேயே அருண் ஜேட்லி உறுதியளித்திருந்தார். (இ-5)

# சவாலை எதிர்நோக்கி வருகிறோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் பிளவடைந்திருப்பதா அல்லது ஒன்றிணைந்து முன்நோக்கி நகர்வதா என்ற சவாலை மக்கள் எதிர்நோக்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷண மிசனில் நேற்று முன்தினம் நடைபெற்ற கம்பன் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இங்கு இப்போது இசைக்கப்பட்ட தேசிய கீதத்தில் ஒரு தாய் மக்கள் நாம என குறிப்பிடப் பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க இந்த தேசிய கீதத்தை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பாட முடியும் என கூறியிருந்தார்.

எனினும், இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது அதனை விமர்சனம் செய்த பலர் சிங்கள கலாச்சாரத்தையோ, வரலாற்றையோ தெரிந்து கொண்டவர்கள் அல்ல.

தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டதன் ஊடாக குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள சிலர் முயற்சித்தனர்.

அனைவரையும் ஒன்றிணைக்கும் நோக்கில் ஜனாதிபதி இதனைச் செய்தார்.

குறுகிய நோக்கங்களின் அடிப்படையில் பிளவடைந்த நாடு ஒன்றையா அல்லது இணைந்து நாட்டை முன்னேற்றும் நடவடிக்கையே தொடர்வது என்பதனை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஒன்றாக இணைந்திருப்பதன் மூலம் நமக்கு பல்வேறு பலன்கள் கிடைக்கின்றன என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 28.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 144.93 | 148.91 |
| பவுண்ட் | பிரிட்டன் | 203.88 | 211.14 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 160.65 | 167.07 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 147.19 | 153.31 |
| டொலர் | கனடா | 108.48 | 113.01 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 107.74 | 112.80 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.12 | 109.13 |
| ரூபா | இந்தியா | 2.1510 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6641 |
| குவைத் | டினார் | 476.7893 |
| ஓமான் | ரியால் | 373.7484 |
| கட்டார் | ரியால் | 39.5148 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3689 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1775 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 50 | 70 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 100 | 120 | 110 | 100 |
| தக்காளி | 40 | 50 | 25 | 30 | 60 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 60 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 35 | 50 | 80 | 80 | 40 |
| கரட் | 100 | 80 | 70 | 80-160 | 120 | 100 | 80 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 30 | 50 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 45 | 50 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 80 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 65 | 70 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 110 | 100 | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 50 | 100 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 45 | 80 | 120 | 70 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 40 | 80 | 60 | 70 | 50 |
| லீக்ஸ் | 140 | 100 | 90 | 100 | 160 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 80 | 120 | 70 | 70 |
| கறிமிளகாய் | 140 | 100 | 70 | 100-160 | 120 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 300-50 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 140 | 200 | 70 | 120 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 40 | 50 | 70 | — | 60 |
| கீரை - 1பிடி | 60 | 30 | 20 | 30 | 30 | 50 | 30 |
| தேசிக்காய் | 200 | 150 | 110 | 120 | 300 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 35-45 | 40 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 110 | 130 | 120 | 140 | 140 |
| வெங்காயப்பூ | 120 | 150 | — | — | — | 80 | 80 |
| முள்ளங்கி | 40 | 40 | 25 | 50 | 60 | — | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## உண்ணாவிரதம் இருந்து திலீபன் மரணம் 141

...அதற்குப் பிரபாகரன், நாள்ள என்ன நடக்கும் என்பதே நமக்குத் தெரியாது. முதலில் அதற்கான சட்டத்தைப் பாராளுமன்றத்தில் இலங்கை அரசு நிறைவேற்றட்டும். எனக்குப் பதவி ஆசை எதுவும் கிடையாது என்று பிரபாகரன் கூறினார்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த விடுதலைப்புலி இயக்கத் தளபதி திலீபன் மரணமடைந்தார். அவருக்கு வயது 23.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு அடுத்த முக்கிய தலைவர்களில் ஒருவர் திலீபன். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுச் செயலாளராக இருந்து வந்தார்.

ராஜீவ்காந்தி-ஜெயவர்த்தனா ஒப்பந்தம் கையெழுத்தாகி, ஆயுதங்களை விடுதலைப்புலிகள் ஒப்படைத்த பிறகும் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றாததைத் திலீபன் வன்மையாகக் கண்டித்தார்.

### உண்ணாவிரதம்

சிறையில் உள்ள விடுதலைப்புலிகளை விடுதலை செய்ய வேண்டும், தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதை நிறுத்த வேண்டும், வடக்கு- கிழக்கு மாகாணங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள் திறப்பதை உடனே நிறுத்த வேண்டும், சிங்கள ஊர்காவல் படையினரிடம் இருந்து ஆயுதங்களை உடனே பறிக்க வேண்டும், இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப் படும் சகல வேலைகளையும் நிறுத்த வேண்டும் என்ற ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் 15.09.1987 அன்று சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் கந்தசாமி கோவிலில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

ஒரு சொட்டுத் தண்ணீர் கூட குடிக்காமல் அவர் உண்ணா விரதம் இருந்ததால் உடல் நிலை வெகு விரைவாக மோசம் அடைந்தது.

### தூதர் முயற்சி தோல்வி

திலீபன் உண்ணா விரதத்தை நிறுத்த இந்தியா முயற்சி எடுத்துக் கொண்டது. இலங்கையில் உள்ள இந்திய துணைத்தூதர் நிருபம் சென், யாழ்ப்பாணத்துக்குச் சென்று சமரசப் பேச்சு நடத்தினர். ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியில் அடைந்தது.

பிறகு இந்திய தூதர் தீட்சித் யாழ்ப்பாணத்துக்குச் சென்று சமரசப் பேச்சு நடத்தினார். ஆனால் அவர் முயற்சியும் வெற்றி பெறவில்லை.

### உணர்வு இழந்தார்

இதற்கிடையில் திலீபன் உணர்வு இழந்தார். அவர் உடல் நிலை வரவர மோசம் அடைந்தது.

உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி பலர் வேண்டுகோள் விடுத்தும் திலீபன் சம்மதிக்கவில்லை. தொடர்ந்து உண்ணா விரதம் இருந்தார்.

உண்ணாவிரதத்தின் போது இடையிடையே மக்கள் மத்தியில் திலீபன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

நமது இயக்கத்தின் கோரிக்கைகளுக்காகப் புனிதமான போராட்டத்தில் ஈடுபடுகிறேன்.

சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் ஈடுபடுகிறேன். சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்து நமது இயக்க உறுப்பினர்கள் 650 பேருக்கு மேல் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். அவர்களின் வழியைத்தான் நான் பின்பற்றுகிறேன்.

அன்பார்ந்த மக்களே! என்னால் அதிகம் பேச முடியாது. ஆனாலும் உங்களுடன் பேச வேண்டும் போல் இருக்கிறது. உங்களைப் பார்க்கும் போது நீங்கள் தரும் ஆதரவை நினைக்கும் போது மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது ஐந்து கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஒரு சொட்டு நீர்கூட அருந்த மாட்டேன். இது உறுதி. இதையே தலைவர் பிரபாகரனிடமும் வலியுறுத்திக் கூறிவிட்டேன். இறக்க நேரிட்டால்' அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன். நான் இறந்ததும் விண்ணிலிருந்து அங்கே உள்ள நண்பர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலரப்போகும் அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன்.

இவ்வாறு திலிபன் பேசினார். அவரது பேச்சைக் கேட்ட மக்கள் கண்ணீர் சிந்தினார்கள்.


### மரணம்

12 நாட்கள் உண்ணா விரதம் இருந்த திலீபன் 26.09.1987 அன்று காலை 10.58 மணிக்கு உணர்வு திரும்பாமலேயே மரணமடைந்தார்.

அவரது மரணச் செய்தி யாழ்ப்பாண நகரில் காட்டுத் தீபோல பரவியது. அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த திரளான பேர்கள் திரண்டனர்.

### கடையடைப்பு


திலீபன் மரணமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப் பாண நகரில் முழு அடைப்பு நடைபெற்றது.



(தொடரும்)

# சம்பூர் அனல் மின் நிலையம் குறித்து இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சு

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



**(கொழும்பு) திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் 500 மெகா வாட்ஸ் (500 MW ) அலகுகளை கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதன் காரணமாக, சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படும் என்ற விடயம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடவுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில்,

சம்பூரில் மின்சார நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இந்தியா தயாராகி வருகின்ற நிலையில் அதன் காரணமாக சுற்றாடல் பிரச்சினை ஏற்படலாம் என்று அங்குள்ள மக்கள் என்னிடம் தெரிவித்ததோடு, இந்த விடயம் தொடர்பில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றம் சுமத்தினர் என, சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். அனல்மின்சார நிலையத்துக்கு பதிலாக சூரியக்கதிர் மூலமான மின்சார உற்பத்தியை தாம் விரும்புவதாகவும் சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிக்கனமான மின்பாவனைக்கு விசேட தள்ளுபடி!

மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்தும் நுகர்வோருக்கு, விசேட சலுகைகளை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, மின்சாரக் கட்டணத்தை, முதல் மாதக் கட்டணத்தை பார்க்கிலும், அடுத்த மாதம் 10 வீதம் குறைவாகப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு விஷேட தள்ளுபடி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது சீரற்ற காலநிலை நிலவுகின்றது.

எனினும், இக்கால நிலை இன்னும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக இலங்கை மின்சார சபை கூறியுள்ளது.

எனவே, மின்சாரத்தைச் சேமிக்கும் வகையிலேயே இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஜெனரேட்டரகளைப் பயன்படுத்தும் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகையொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# சர்ச்சைக்குரிய 65 ஆயிரம் வீடுகளின் மிட்டால் நிறுவன அதிகாரிகள் இலங்கை வருகின்றனர்

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் வடக்கு கிழக்கில், 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தை முன்னெடுக்க தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திய தொழில் அதிபரின் சர்வதேச நிறுவன அதிகாரிகள் இந்த வாரம் இலங்கை வருகின்றனர்.

இந்திய தொழில் அதிபர் மிட்டாலின் ஏஷ்லொர் மிட்டால் நிறுவனமே 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க அரசாங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

எனினும் அந்த நிறுவனத்தின வீடுகள் நீண்ட காலப் பாவனையைக் கொண்டவையல்ல என்றும் அவை 21 இலட்சம் ரூபா பெறுமதியை கொண்டிருப்பதால், இடம்பெயர்ந்தோருக்கு உகந்தததாக அமையாது என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் மிட்டாலின் நிறுவன அதிகாரிகள் நாளை மறுதினம் 31 ஆம் திகதி இலங்கையில் அமைச்சரவை கேளவப்பத்திரக்குமுவை சந்திக்கவுள்ளனர்.

இதன்போது இறுதி உடன்படிக்கைக்கான வரைபும் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து உடன்படிக்கை வரைபு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதேவேளை மிட்டாலின் வீடமைப்பு திட்டத்துக்கு பதில் வீடுகளை அமைக்க உள்ளூர் நிறுவனங்களும் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளன. (இ-5)

# பொலிஸார் ஒழுக்க விதிகளை மீறியதாக பொலிஸ் ஆணைக்குழு குற்றச்சாட்டு

எம்பிலிப்பிட்டி இளைஞர் மரணம் தொடர்பான சம்பவத்தில் பொலிஸார் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளனர் என பொலிஸ் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

எம்பிலிப்பிட்டியில் இளைஞர் ஒருவர் மரணமான சம்பவம் தொடர்பில் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட 15 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிறுவன ஒழுக்கக் கோவைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளனர் என தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனவே, இந்த அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவினர் ஆலோசனை வழங்கியுள்ளனர் என ஆணைக் குழுவின் தலைவர் ஆரிய தாச குரே தெரிவித்துள்ளார்.

குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் அதனை பரிசீலனை செய்து அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும் என கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி இலங்கையில் விரைவில் கிளை திறக்கும்

இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி (எக்சிம் வங்கி) இலங்கையில் விரைவில் கிளை ஒன்றை திறப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக டில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாத தொடக்கத்தில் இந்தியாவின் எக்சிம் வங்கி பங்களாதேஷில் கிளை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதையடுத்து இலங்கையில் அடுத்த கிளையை திறக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நேபாளம், சீனா, ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளிலும் கிளைகளை ஆரம்பிக்கும் முயற்சியில், இந்தியாவின் எக்சிம் வங்கி ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே வோஷிங்டன், லண்டன், சிங்கப்பூர், யாங்கூன, அடிஸ்அபாபா, ஜோகனஸ்பேர்க் நகரங்களில், இந்தியாவின் எக்சிம் வங்கியின் கிளைகள் இயங்குகின்றன.

இந்த நிலையில், இலங்கையில் புதிய கிளையை அமைப்பதற்கான ஒப்புதலுக்கு காத்திருப்பதாக இந்தியாவின் எக்சிம் வங்கியின் தலைவர் யதுவேந்திர மாத்தூர் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## இது நன்றி கெட்ட உலகமா?

ஒருவருக்கு 100 உதவிகள் செய்திருப்பீர்கள்.

101 ஆவது உதவியை வேறு வழியின்றி மறுத்திருப்பீர்கள். அல்லது இயல்பாகவே முயன்றும் உங்களால் முடியாமல் போயிருக்கும்.

ஆனால், அந்த நபர் 100 ஐயும் மறந்துவிட்டு 101 ஆவது சம்பவத்தையே பெரிதுபடுத்திப் பார்ப்பார்.

உங்களோடு முன்பு போல் பழகமாட்டார். முகம் கொடுத்துப் பேசமாட்டார். ஏன் , உங்களை விரோதிபோல் நடத்தத் தொடங்கி விடவும் கூடும்.

இதுதான் பெரும்பான்மையினரிடம் நாம் காணும் பண்பாடு.

இயல்பாகவே உங்கள் மனம் சலிப்படைந்து விடும். என்ன நன்றி கெட்ட உலகமடா இது? என்று பழிக்கவும் செய்வீர்கள்.

இப்படிப்பட்ட ஓரிரு அனுபவங்களை வைத்து நீங்கள் அடியோடு மாறி விடுவீர்கள்.

யார் என்ன உதவி கேட்பினும் , நமக்கேவம்பு ? எனத் தாமரை இலைத் தண்ணீர் ஆவீர்கள்–இல்லையா?

ஆம் என்பது உங்கள் பதிலானால்–உங்களுக்கும் முதலில் கூறப்பட்ட வகையினருக்கும் அதிக வேறுபாடு இல்லாமல் போய்விடும்.

மேலும்,

தகுதி அறிந்து உதவத்தவறினீர்கள். அல்லது 100 முறை சொன்ன நன்றிகளில் ஒன்றைக் கழிக்க மறந்தீர்கள் என்பதே நியாயமான வாதம்.

இது அவர்கள் செய்யும் தவறுக்கு அடுத்த படியான தவறு.

இத்தகைய மனிதர்கள் நமக்கு அனுபவப் பாடங்களைத் தந்த ஆசான்கள்.

இவர்களைக் கொண்டு உலகின் ஒரு கோணத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர தவறான நியதிகளை நிர்ணயித்துக் கொள்ளல் ஆகாது.

நன்றி கெட்ட ஜென்மங்களை இனம் கண்டு கொள்ளும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்களை விட்டு ஒதுங்க வேண்டுமே தவிர. உலகையே வெறுத்து ஒதுக்கக்கூடாது.

மற்றவர்களுக்கு உதவாமறுத்து கையைக் கட்டிக் கொண்டு நிற்கும் பழக்கம் இன்றைய நடை முறைக்குச் சரிப்பட்டு வராது.

அப்படிச் செய்தால் மனித சமுதாயத்திடம் இருந்து நீங்கள் விலகிப் போகிறீர்கள் என்று பொருள்.

மேற்கூறிய நபர்களை மட்டும் வைத்துத் தவறான கோட்பாடுகளை நிர்ணயித்துக் கொண்டுவிட்டால் நல்ல உள்ளங்களையும் பகைத்துக் கொள்ள நேரிடும்.

பரஸ்பர உதவிகள் கிட்டா. வெற்றிக் குளத்தில் நீச்சலடிக்க முயலுவானேன்?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1395

# சிரிங்க... சிரிங்க...!



முன்னொரு காலத்தில், மலைக் கோட்டை என்னும் நாட்டை முட்டாள் அரசன் ஒருவன் ஆண்டு வந்தான்.

யாருக்கும் தோன்றாத விந்தையான எண்ணங்கள் அவனுக்கு தோன்றும். உடனே அவற்றைச் சட்டமாக்கி விடுவான். அதனால் மக்களுக்கு துன்பம் ஏற்படுமே என்று சிறிதும் சிந்திக்க மாட்டான். தண்டனைக்கு அஞ்சிய மக்களும் அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர்.

ஒருமுறை-

ஆற்றங்கரை ஓரமாக வந்து கொண்டிருந்தான். அதன் இரு கரைகளிலும் மக்கள் துணி துவைத்துக் கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்த அரசன், "இனி யாரும் ஆற்றின் இடது கரையில் துணி துவைக்கக் கூடாது. வலது கரையில்தான் துணி துவைக்க வேண்டும். மீறி நடந்தால் மரண தண்டனை என்று சட்டம் போட்டான்.

என்ன செய்வர் மக்கள். துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு ஆறறின் வலது கரையிலேயே துணி துவைக்கத் தொடங்கினர்.

இன்னொரு நாள் அந்த அரசனுக்கு விந்தையான எண்ணம் ஒன்று தோன்றியது.

"நம் நாட்டு மக்கள் நினைத்தால் சிரிக்கின்றனர். நினைத்தால் அழுகின்றனர். எப்போது சிரிப்பார்கள் எப்போது அழுவார்கள் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இதை ஒழுங்குபடுத்த வேண்டும். இதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தான். அருமையான வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

"இனி நம் நாட்டு மக்கள் அனைவரும் ஒருநாள் சிரிக்க வேண்டும். அடுத்த நாள் அழ வேண்டும். சிரிக்க வேண்டிய நாளில் அழுதாலோ, அழ வேண்டிய நாளில் சிரித்தாலோ தூக்குத் தண்டனைதான்" என்று சட்டம் இயற்றினான்.

சிரிக்க வேண்டிய நாளில் ஒருவர் இறந்து போனார்.

அந்தப் பிண ஊர்வலத்தில் எல்லாரும் சிரித்துக் கும்மாளமிட்டபடி சென்றனர். அழ வேண்டிய நாளில் ஒருவருக்கு திருமணம் நடந்தது.

திருமணப் பந்தலில் எல்லாரும், "ஐயா! உங்களுக்கு இப்படிப் பட்ட நிலையா வர வேண்டும்? இதைப் பார்க்கவா நாங்கள் உயிருடன் இருந்தோம். கடவுளே! உனக்குக் கண் இல்லையா? இனி நாங்கள் என்ன செய்வோம்" என்று அழுது ஒப்பாரி வைத்தனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவருக்கு இதன் காரணம் புரியவில்லை.

அங்கே இருந்தவர்களைப் பார்த்து, "திருமணம் என்பது மகிழ்ச்சியான நிகழ்ச்சி அல்லவா? நீங்கள் எல்லாம் குதித்துக் கும்மாளமிட வேண்டாமா? கோலாகலமாகச் சிரித்துமகிழ வேண்டாமா? கலகலப்பான சிரிப்பொலி எங்கும் கேட்க வேண்டாமா? ஏன் இப்படி அழுது புலம்புகிறீர்கள்? சிரித்து மகிழ்ச்சியாக இருங்கள்," என்று கலகலவென்று சிரித்தார்.

திகைப்படைந்த அவர்கள் அவர் வாயைப் பொத்தினர்.

"எங்கள் நாட்டு வழக்கம் உங்களுக்குத் தெரியாது. இன்று அழ வேண்டிய நாள். எது நடந்தாலும் நாங்கள் அழுது ஒப்பாரி வைக்க வேண்டும். இந்த நாளில் யார் சிரித்தாலும் தூக்குதான். நல்ல வேளை. அரண்மனை வீரர்கள் யாரும் உங்களைப் பார்க்கவில்லை. உயிர் பிழைத்தீர்கள்," என்றார் ஒருவர்.

இப்படியே சில நாட்கள் சென்றன

திடீரென்று, பக்கத்து நாட்டு அரசன் அந்த நாட்டின் மீது படையெடுத்து வந்தான். (தொடரும்)

03.2016 29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1632 - கியூபெக் ஆங்கிலேயரிடமிருந்து பிரெஞ்சுக்களிடம் கைமாறியது.
- 1792 - 13 நாட்களின் முன்னால் சுடப்பட்ட சுவீடனின் மூன்றாம் குஸ்தாவ் மன்னன் இறந்தான்.
- 1807 - 4 வெஸ்டா என்ற இதுவரை அறிந்தவற்றில் மிக வெளிச்சமான சிறுகோளை ஜேர்மனிய வானியலாளர் ஹைன்ரிக் ஒல்பர்ஸ் கண்டுபிடித்தார்.
- 1849 - பஞ்சாபை ஐக்கிய இராச்சியம் கைப் பற்றியது.
- 1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே பின்னர் இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது.
- 1867 - கனடாக் கூட்டமைப்பை ஜூலை 1 இல் உருவாக்குவதற்கான பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்தை பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி அரச ஒப்புதலை அளித்தார்.
- 1886 - ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் ஜோன் பெம்பேர்ட்டன் என்பவர் முதல் தொகுதி கொககக் கோலா மென்பானத்தைத் தயாரித்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: வி-1 பறக்கும் குண்டு கடைசித் தடவையாக இங்கிலாந்தைத் தாக்கியது.
- 1971 - மைலாய் படுகொலைகள்: அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி என்பவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள தண்டனை பெற்றான்.
- 1973 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறினர்.
- 1974 - நாசாவின் மரைனர் 10 விண்கலம் புதன் கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.
- 2004 - பல்கேரியா, எஸ்தோனியா, லாத்வியா, லித்து வேனியா, ருமேனியா, சிலோவாக்கியா, சிலொ வேனியா ஆகியன நேட்டோ அமைப்பில் முழுமையான அங்கத்துவம் பெற்றன.
- 2004 - அயர்லாந்து புகைத்தலை உணவகங்கள் உட்பட எல்லா வேலையிடங்களிலும் தடை செய்த முதல்நாடானது.
- 2005 - யாஹூ 360 சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 2007 - கணிதத்தில் நோபல் பரிசு எனப்படும் நோர்வே நாட்டின் ஏபல் பரிசு தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1790 - ஜான் டைலர், 10 ஆவது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1862)
- 1927 - ஜோன் வேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 2004)
- 1941 - ஜோசப் டெய்லர், இளையவர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

**இறப்புக்கள்**

- 1985 - ஜார்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (பி. 1897)
- 2000 - சி. கே. சரஸ்வதி, தமிழ்த் திரைப்பட நடிகை

# டில்லியில் வைத்து தாக்கப்படும் ஆபத்துக்குள்ளானார் ஜே.ஆர்.

## பொலிஸ் அதிகாரி தகவல் வெளியீடு



(கொழும்பு)

**கொழும்பில் இலங்கை கடற்படைச் சிப்பாய் ஒருவரால் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தாக்கப்பட்ட பின்னர், டில்லியில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அதுபோன்றதொரு தாக்குதலை எதிர்கொள்ளும் வாய்ப்பு இருந்ததாக இலங்கை பொலிஸ் துறையின் முன்னாள் அதிகாரி நிமால் லெகே தகவல் வெளியிட்டுள்ளார்.**

இலங்கை சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாக இருந்த நிமால் லெகே, முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர். இதுகுறித்து, அவர் வழங்கியுள்ள செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளதாவது,

"1987இல் இந்திய -இலங்கை உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்காக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு வந்திருந்த போது, அந்த துரதிர்ஷ்டமான சம்பவம் நடந்திருந்தது.

கடற்படைச் சிப்பாய் ஒருவர்., தனது துப்பாக்கிப் பிடியினால் தாக்க முயன்றிருந்தார். அந்த சர்ச்சைக்குரிய சம்பவம் பற்றி இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பேசப்பட்டது.

அந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர், இந்தியாவின் தேசிய நாள் நிகழ்வில் இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரதம விருந்தினராகப் பங்கேற்க விருந்தார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகையின் பாதுகாப்பு அதிகாரிகளுடன், இலங்கை ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பாக நாம் கலந்துரையாடிய போது, இலங்கை ஜனாதிபதி அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிடுவது குறித்து கலந்துரையாடப்படவில்லை.

ராஜீவ் காந்திக்கு நடந்தது போன்ற சம்பவம் டில்லியில் இலங்கை ஜனாதிபதிக்கு நிகழலாம் என்று சந்தேகம் எழுந்தது.

அப்போது எமக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன. சிறப்பாக அமைக்கப்பட்ட மேடையில் இருந்து அணிவகுப்பைப் பார்வையிடுவது அல்லது அணிவகுப்புக்கு முன்னால் செல்வது என்பனவே அவை.

தாம் அணிவகுப்புக்கு முன்னே சென்று பார்வையிடவுள்ளதாக இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறினார். முடிவை எடுப்பதற்கு முன்னர் எல்லாப் பக்கங்களையும் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது.

நாம் இரண்டு கோரிக்கைகளை விடுத்தோம். அணிவகுப்பை ஜனாதிபதி பார்வையிடும் போது, அந்த நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகளே அவருடன் செல்வது வழக்கம். ஆனால் இலங்கை ஜனாதிபதி, எமது பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவரை அனுமதிக்கும்படி நாம் கோரினோம். அந்த வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது.

இலங்கையில் நடந்து செல்லும் செங்கம்பள அணிவகுப்பில் முதல் வரிசைப் படையினரில் இருந்து ஒரு மீற்றர் தூரத்தில் அமைக்க வேண்டும் என்றும் நாம் கோரினோம்.

உலகிலேயே முதல்முறையாக, அணிவகுப்பு வரிசையில் இருந்து ஒரு மீற்றர் தூரத்துக்கு அப்பால் செங்கம்பளம் விரிக்கப்பட்டது. இதே உத்தி பல்வேறு நாடுகளில் இப்போது பின்பற்றப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 676

தர்சனி





ரதி

ஒரு கூட்டம் செல்போனை பார்த்து சிரிக்குது.. இன்னொரு கூட்டம் லப்டொப்பை பார்த்து சிரிக்குது.. பக்கத்துல இருக்கறவங்களிடம் யாரும் சிரிச்சுப் பேசுறது கூட இல்லை.

சந்துரு




றொகான்



நிஷா




வின்ஜக்ஷன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "றக்பி" நட்சத்திரம் தாஜுதீன் கொலையாளிகளை சுற்றி இறுகிக்கொண்டிருக்கும் சுருக்குதடம்

ஹேவ்லொக் விளையாட்டுக்கழக 'றக்பி' விளையாட்டு வீரரும் இலங்கை றக்பி விளையாட்டுக் குழுவின் பதில் கப்டனுமான வஸிம் தாஜுதீனின் மர்மமான மரணம் சம்பந்தமான பொலிஸ் விசாரணைகளை முடிவிற்குக் கொண்டு வருவதன் மூலம் விடயத்தை மூடி மறைப்பதற்கு எடுக்கப்பட்ட முதல்தரமான முயற்சியில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவரெனும் குற்றச்சாட்டின் மீது குற்றவியல் புலன் விசாரணை (CID) இலாகா முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை கைது செய்யவிருக்கிறது.

இது விடயமாக உதவி புரிந்து ஊக்கம் அளித்திருந்ததன் அடிப்படையில் கொழும்பு கிரில்லப்பனை மற்றும் நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த மேலும் இரு பொலிஸ் அதிகாரிகளுங்கூடவே கைது செய்யப்படவிருப்பதாக தம்மை அடையாளங் காட்ட விரும்பாத பொலிஸ் வட்டார தகவல்கள் கூறுகின்றன.

கொலையில் நேரடி தொடர்பில்லாதவர்களான இந்த இரு பொலிஸ் அதிகாரிகளும் அந்த முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர்களது அறிவுறுத்தலுக்கிணங்க செயற்பட்டவர்களாவர். விபத்து நடந்து ஒரு சில மணித்தியாலங்களுக்குள் குறித்த அச்சம்பவ இடம் சம்பவத்திற்கான அறிகுறிகளெதுவும் இல்லாமல் சுத்தம் செய்யப்படுவது சட்டப்படி முற்றிலும் தடைசெய்யப்பட்ட தாயிருந்தும் பொறுப்பற்றவிதமாக அதனை சுத்தம் செய்வித்திருந்ததுடன் மரணத்திற்கேதுவான மோசமானதொரு விபத்தாக மட்டும் அதனை காட்டும் விதத்தில் பொலிஸ் "விபத்து- அறிக்கையும்" மாற்றப்பட்டிருப்பதாக பொலிஸ் அத்தியட்சகர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அத்தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இந்த பொலிஸ் அதிகாரிகளிருவரும் அரச தரப்பு சாட்சிகளாக மாறி உண்மைகளைப் போட்டுடைக்கப்போவதாகவும் பேச்சடிபடுகிறது.

"அவர்கள் உண்மைகளைக் கூறிவிடப் போகிறார்களென்றால் எதற்காக விடயங்களை மூடி மறைத்துவிட முயற்சிக்க வேண்டும்? அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு கட்டளையிட்டவர்கள் யார்? தாஜுதீன் கார் விபத்திலேயே மரணமடைய நேர்ந்ததாகக் காட்ட விரும்பி விசாரணைக்கு தடையேற்படுத்த அவர்கள் ஏன் முயற்சிக்க வேண்டும்? இந்த முயற்சியில் ஈடுபட்டவர்களை குற்றப்புலனாய்வினர் எளிதாகவே கைது செய்திருக்க முடியும்" என்பதே அவ்வட்டாரங்களது கூற்றாக இருக்கிறது. சந்தேக நபர்களாக இருக்கக்கூடிய ஏனையோரிடையே மகிந்த ராஜபக்ஷவுடைய பிரபல பாதுகாப்பு அதிகாரிகள் இருவருங்கூட அடங்குகின்றனர். இவர்களிலொருவர் கப்டன் திஸ்ஸ என்பவராவார் என பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

"தாஜுதீன் கொலையில் சம்பந்தப்பட்டவர்களாக இதுவரையில் 20 பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் கொலைக்கு அனுசரணையாக ஊக்கமும் உதவியுமளித்தவர், கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதியரசர் நிசந்தா பீரிஸின் அறிவுறுத்தலின் பேரில் கைது செய்யப்படவிருக்கிறார்கள். சம்பவித்த நிகழ்வுகள் மற்றும் விஞ்ஞான ரீதியிலான ஆதாரங்களின் அடிப்படையிலேயே இந்த கைதுகள் இடம்பெறவிருப்பதுடன் இச்சந்தேக நபர்களனைவரும் தீவிரமான கண்காணிப்பிலேயே உள்ளனர்" என்றே அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

அவர்கள் கைது செய்யப்படுவதில் ஏற்படும் தாமதங்கள் காரணமாக அவர்கள் நாட்டை விட்டுத் தப்பிப் போய்விடக்கூடும் என்பது பற்றி கேட்டபோது 'குடிவரவு- குடியகல்வு' இலாகாக்களுக்கு இதுபற்றி முறைப்படி அறிவிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. தாஜுதீன் கொலை செய்யப்பட்ட 2012 மே 17 க்கு முன்னரும் பின்னருமான திஸ்ஸவுடைய தொலைபேசி பேச்சு விபரங்கள் திரட்டப்பட்டு யார், யாருடன் அவரது பேச்சுக்கள் இடம்பெற்றதென அறிவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.


றக்பி விளையாட்டு வீரரான தாஜுதீன் கப்டனாக இருந்த அந்த றக்பி விளையாட்டுக் கழகத்தை விலைக்கு வாங்குவதற்கு இளைய பாராளுமன்ற உறுப்பினரான அந்த இளைஞன் எடுத்து வந்த முயற்சிகளை தாஜுதீன் தடுத்துவிட்ட காரணத்தினாலேயே அவரை கொலை செய்துவிட குறித்த இளைஞர் திட்டமிட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்த இளம் 'MP' யும் கப்டன் திஸ்ஸவும் இக்கொலைத் திட்டம் பற்றி தொலைபேசியில் பேசியிருந்த உரையாடல் விபரங்கள் இப்போது 'CID' யிடம் உள்ளது.

"இக்கொலைத் திட்டம் பற்றிய தொலைபேசி உரையாடல் விபரங்கள் வெளிநாட்டு நிபுணர்களால் ஆராயப்பட்டு உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்பதே இவ்வட்டாரங்களது கூற்றாகும்.

அதே நேரம் கொழும்பு மேலதிக நீதியரசர் நிசந்தா பீரிஸ்ஸை மாத்தறை மாவட்ட நீதிபதியாக இடம் மாற்றுவதென்ற நீதிச் சேவைகள் ஆணைக்குழு ('JSC')வின் முன்னைய தீர்மானம் கடும் குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருந்தது.

"இடமாற்றம் பற்றிய விடயம் எமக்கு அறிவிக்கப்பட்டபோது தாஜுதீன் கொலை வழக்கை விசாரிக்கப் போவது யார் என்பதுடன் புதிதாக வரும் நீதியரசர் முன்னைய அரசினது நண்பராக இருக்கும் பட்சத்தில் வழக்கு என்னவாகும் என்பதும் எமக்கு புதிராகவேயிருந்தது. இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் கண்ணுக்குப்புலப்படாத கரமொன்று மறைமுகமாகச் செயற்படுவதாகவேயிருந்தது. ஆனாலும் இந்த இடமாற்றம் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று இரத்துச் செய்யப்பட்டமை அனைத்து 'CID' யினருக்கும் பெரும் ஆறுதலாகவே இருந்தது" என இதே வட்டாரங்கள் மேலும் கூறியிருந்தன.



சண்டே லீடர் பத்திரிகையில் "றக்பி நட்சத்திரம் தாஜுதீன் கொலையாளிகளை சுற்றி இறுகிக் கொண்டிருக்கும் சுருக்கு தடம்" எனும் தலைப்பில் வெளியான கட்டுரை யின் தமிழாக்கம்...


இரண்டாவது சடல பரிசோதனையொன்று பேராசிரியர் டாக்டர் அஜீத் தென்னக்கோன் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட போதுதான் தாஜுதீன் மரணமாகியது கார் விபத்தின் காரணமாக அல்லாமல் மோசமான அடிகாயங்களாலேயே என்ற மறுக்க முடியாத ஆதாரங்கள் வெளிப்பட்டன.

20 ஆம் பக்கம் பார்க்க...

# தமிழ்மக்கள் சமவுரிமையுடன் இலங்கையில் வாழ்கின்றனர்

## அமைச்சர் அமீர் அலி இந்தியாவில் தெரிவிப்பு

**இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் சமவுரிமை பெற்று வாழ்கின்றனர் எனவும் தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் முழுமையாகத் தீர்க்க மைத்திரி அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் அமீர் அலி இந்தியாவில் வைத்து தெரிவித்துள்ளார்.**



சென்னைக்கு சென்ற இலஙகை அமைச்சர் அமீர் அலி நேற்று விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

நான் எனது சொந்த விடயமாக சென்னை வந்துள்ளேன்.

இலங்கையில் கடந்த ஆட்சியை விட இந்த ஆட்சியில் மக்கள் முழு நிம்மதியுடன் வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கு பெரிய பிரச்சினை என்று எதுவும் இல்லை.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் சம உரிமை பெற்று வாழ்கின்றனர். தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் முழுமையாக தீர்க்க மைத்திரி சிறிசேனா அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இந்தியாவில்இருந்து சிலரை இலங்கைக்கு அழைத்து வந்து உடல் உறுப்புகளை எடுத்து விடடு மீண்டும் இந்தியாவுக்கு கொண்டு வந்து விடுவதாக வந்த புகார்களின் அடிப்படையில் எங்கள் நாட்டு பொலிஸ் துறையினர் விசாரணை நடத்தி ஒரு சிலரை கைது செய்துள்ளனர். இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

மேலும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இலங்கை அரசு பார்த்துக் கொள்ளும்.

இந்தியா-இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இரு நாட்டு அரங்சாங்கமும் சுமூகமாகப் பேசி தீர்வு காண வேணடும். இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதால் அவர்களை எங்கள் கப்பல் படையினர் கைது செய்கிறார்கள். அதன் பின்னர் விசாரணை நடத்தி மனிதாபிமான அடிப்படையில பிடிபட்ட மீனவர்கள் விடுவிக்கப படுகிறார்கள். ஆனால் அவர்களின படகு, வலைகளை திருப்பி தர முடியாது. ஏனெனில் எங்களது சட்ட விதி அப்படி உள்ளது. நீதிமனற உத்தரவுப்படி மட்டுமே அதனை திருப்பி ஒப்படைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

# சம்பூரில் இந்திய வீட்டுத்திட்டத்தால் கடனாளியாவதாக மக்கள் கவலை

போர் காரணமாக 10 வருடங்களுக்கு முன்னர் தமது பிரதேசத்திலிருந்து வெளியேறியிருந்த சம்பூர் மக்கள் அண்மையில் தான் மீளக்குடியேற அனுமதிக்கப் பட்ட நிலையில், தற்காலிக கொட்டில்களிலும் கூடாரங்களிலும் வாழ்கின்றனர்.

இலங்கையின் கிழக்கே திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் அண்மையில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்கள் இந்திய உதவி திட்ட வீடுகளை பெறுவதற்கு தயக்கம் காட்டுவதாக கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்திய-உதவி வீடொன்றை நிர்மாணிப்பதற்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பயனாளிகளுக்கு வழுங்கப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு செய்யப்பட்ட செலவ்ன மதிப்பீட்டுத தொகையில் 7 வருடங்கள் கழுந்த பின்னரும்வீடொன்றை அமைப்பது சாத்தியமற்றது என்று சம்பூர் இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே வீடுகளை பெறுவதற்கு தகுதியுடைய பயனாளிகள்அவற்றை ஏற்பதற்கு தயக்கம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

போர் காரணமாக 10 வருடங்களுக்கு முன்னர் தமது பிரதேசத்திலிருந்து வெளியேறியிருந்த சம்பூர் மக்கள் அண்மையில் தான் மீளக்குடியேற அனுமதிக்கப் பட்ட நிலையில், தற்காலிக கொட்டில்களிலும் கூடாரங்களிலும் வாழ்கின்றனர்.

அதிகாரபூர்வ தகவல்களின் படி, இதுவரையில் 350 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன. இந்த குடும்பங்களில் 204 குடும்பங்கள் இந்திய உதவி வீடுகளை பெறுவதற்கு தெரிவாகியுள்ளதாக அறியமுடிகின்றது.

ஏற்கனவே சம்பூர் பிரதேசத்தின் அண்மித்த கிராமங்களான கூனித்தீவு, நவரடணபுரம், கடற்கரைச்சேனை, கட்டைப்பறிச்சான் போன்ற கிராமங்களில் இந்த உதவி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வீடுகளை அம்மக்கள் பெற்றிருந்தாலும் வழங்கப் பட்ட நிதி போதுமானதாக இல்லாத நிலையில் வீடு கிடைத்தும் கடனாளிகளாகவே அவரகள் தங்களின் வீடுகளை கட்டி முடித்துள்ளதாக குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

தொழிலாளர்களின் கூலி அதிகரிப்பு , கட்டட பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியவற்றை காரணம் காட்டி வீட்டுக்கான தொகையை 7 இலட்சம் ரூபா தொடக்கம் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்க வேண்டும் என சம்பூர் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்திய வீடமைப்புக்கு பொறுப்பான நிறுவனம் மற்றும் சிவில் அதிகாரிகளின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினை மக்களால் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அவர்களால் அது நிராகரிக்கப்பட்டு விட்டதாக கூறப் படுகிறது. (இ-5)

# கஞ்சா கலந்த நிஜாம் பாக்குடன் இருவர் கைது

(கொழும்பு)

அம்பாறை, நாவிதன வெளிப் பிரதேசத்தில் கஞ்சா கலந்த நிஜாம் பாக்குகளை கொண்டுவந்ததாகக் கூறப் படும் 20 மற்றும் 22 வயதுகளையுடைய இளைஞர்கள் இருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மோட்டார்சைக்கிளொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் தமக்குக் கிடைத்த தகவலைத்தொடர்ந்து, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சவளக்கடை பிரதான வீதியில் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

இதன்போது, 14 கிராம் கஞ்சா கலந்த நிஜாம் பாக்கைக் கொண்ட மூன்று பக்கெட்டுகளை மோட்டார் சைக்கிளில் கொண்டுவந்த இவர்களை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்கள் நற்பிட்டிமுனை, சவளக்கடைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இச்சந்தேக நபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# அதிவேக நெடுஞ்சாலையில் அறவீட்டு முறையில் மாற்றம்

(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இலத்திரனியல்கட்டண அறவீட்டு முறைக்காக வாகனங்களை பதிவுசெய்வதற்கான ஊக்குவிப்பு வாரம் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

ஆயிரம் ரூபாய்தொகையை செலுத்தி பதிவுசெய்ய முடிவதுடன், இந்த வாரத்தில் பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீத பயண கட்டண மற்றும் இலவச அனுமதி சீட்டு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. அதைத் தவிர, பதிவு செய்வதற்கு செலுத்தப் படும் ஆயிரம் ரூபாயை அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் போது செலுத்த வேண்டிய கட்டணமாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கழித்துக் கொள்ள முடியும்.

நேற்று முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை இந்த பதிவு செய்யும் நடவடிக்கை கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பணம் அறவிடும் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள காரியாலயத்தில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# செய்தித்துளிகள்

## விபத்தில் பிக்கு உயிரிழப்பு

பன்னிப்பிட்டியவில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தின் போது, பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வானொன்று, வீதியை கடக்க முயற்சித்த பிக்குவை மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலங்கம-மாலபே பகுதியைச் சேர்ந்த விகாரை யொன்றன் பிக்கு ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். எனினும் இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி தப்பிச் சென்றுள்ளதாகவும் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## விவசாயிகள் மகிழ்ச்சி

(கரணவாய்)

வடமராட்சியில் இம்முறை வெங்காயச் செய்கை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இம்முறை வெங்காயம் அமோக விளைச்சல் அடைந்துள்ளதால் இவ்வாறு மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த வருடம் நோய்த்தாக்கத்தினால் வெங்காயத்தின் விளைச்சல் குறைந்திருந்தது.ஆனால் இம்முறை அமோக விளைச்சல் கிடைத்துள்ள தால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (இ-60)

## பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் இன்று

ஆறுகால்மடம் அரசடி ஞான வைரவர் சுவாமி திருக்கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளன.

வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ

## கடலில் சீனப் பிரஜை பலி

வெலிகம - மிரிஸ்ஸ உடுபில கடற்பகுதியில் நீராடச் சென்ற சீனப் பிரஜை ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கி விபத்துக்குள்ளான நிலையில் மீட்கப்பட்ட அவர், மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த சீனப் பிரஜை பலியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சடலம் மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

அம்பலாங்கொட மீன்பிடித் துறைமுகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பலியானவர் வர்த்தகர் ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-5)

## விமானப்படைச் சிப்பாய் பொலிஸாரால் கைது

வெளிநாட்டுப் பெண்ணை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட விமானப்படை சிப்பாய் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை-ராகம்வெல கடற்பகுதியில் வைத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் கடற்கரையில் தனியாக அமர்ந்திருந்த வேளை குறித்த பெண்ணை விமானப்படை சிப்பாய் காட்டுப்பகுதிக்கு இழுத்துச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த படை சிப்பாயிடமிருந்து தப்பி வந்தபெண் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து ராகம்வெல பிரதேச முகாமில் பணிபுரியும் 30 வயதான விமானப்படைச் சிப்பாயை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

129

## 56 வயதில் டி.ஆர்.சுந்தரம் மாரடைப்பால் மரணம் (1963)

நாராயணன் கம்பெனி தயாரித்த கணவனே கண் கண்ட தெய்வம், பாக்கிய லட்சுமி ஆகிய படங்களில் பணியாற்றிய கே.வி. சீனிவாசன், மாடர்ன் தியேட்டர் சுக்காக் யாருக்கு சொந்தம்? என்ற படத்தை டைரக்ட் செய்தார். இதில் கல்யாண் குமார், தேவிகா, மனோகர், எஸ்.வி.சுப்பையா ஆகியோர் நடித்தனர்.

இந்தப்படம் தயாராவதற்கு முன் 1962 நவம்பர் மாதத்தில் சுந்தரத்தின் மூத்த மகன் ராமசுந்தரத்தின் திருமணம் பழனியில் நடந்தது. மணப்பெண் கலைவாணி, டி.ஆர்.சுந்தரத்துக்கு நெருங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்த திருமணத்துக்கு மு.கருணாநிதி, முரசொலி மாறனுடன் வந்து மணமக்களை வாழ்த்தினர்.

**கமிட்டி அமைப்பு**

இந்த சமயத்தில் ஸ்டுடியோ நிர்வாகத்தை கவனித்து வந்த ஆர்.வி.சொக்கலிங்கம் உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.


அவர் குணமடைந்தாலும் ஸ்டுடியோ நிர்வாகத்தை முன்போல் கவனிக்க முடியாது என்பதை அறிந்த கொண்ட சுந்தரம், ஸ்டுடியோ நிர்வாகத்தை கவனிக்க தனது நெருங்கிய நண்பர்கள் 3 பேர் கொண்ட குழுவை அமைத்தார்.

**கதாநாயகியாக மனோரமா**

மெனி ரிவர்ஸ் டு கிராஸ் என்ற ஆங்கிலப் படத்தைத் தழுவி கொஞ்சம் குமரி படத்தை தயாரிக்க சுந்தரம் தீர்மானித்தார்.

அதுவரை நகைச்சுவை வேடங்களில் நடித்து வந்த மனோரமாவை கதாநாயகியாக நடிக்க வைத்தார்.

கதாநாயகனாக நடித்தவர் ஆர்.எஸ்.மனோகர்.



மகன்கள் ராமசுந்தரம், கந்தசுந்தரம் ஆகியோருடன் டி.ஆர்.சுந்தரம்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடந்து வந்த சமயத்தில் யாரும் எதிர்பாராத அதிர்ச்சி நிகழ்ச்சி நடந்தது.

கொஞ்சம் குமரி மாடர்ன் தியேட்டர்சின் 99 ஆவது படமாகும். அதன் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த போது நமது 100 ஆவது படத்தைப் பிரமாண்டமாகத் தயாரிக்க டி.ஆர்.சுந்தரம் திட்டமிட்டார். அதற்கான முன் ஏற்பாடுகள் எல்லாம் நடந்து வந்தன.

**திடீர் மரணம்**

1963 ஒகஸ்ட் 28 ஆம் திகதி.

அன்று இரவு சென்னைக் குப் புறப்பட சுந்தரம் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அதனால் சென்னைப் பயணத்தை இரத்து செய்தார். டாக்டர்கள் வந்து அவரைப் பரிசோதித்தார்கள்.

ஓய்வு எடுக்கும்படி கூறினார்கள். அதுவரை சுந்தரத்திற்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதே இல்லை.

பூரண ஆரோக்கியத்துடன் இருந்து வந்தார். அன்று இரவு அவருக்கு சரியான தூக்கம் இல்லை.

மறுநாள் (29 ஆம் திகதி) மாலை 6.30 மணிக்கு கடும் நெஞ்சு வலி ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி மரணமடைந்தார். கடுமையான மாரடைப்பு காரணமாக அவர் இறந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

சுந்தரம் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி அன்று ஸ்டூடியோவில் கொஞ்சம் குமரி படப்பிடிப்பு நடைபெறவிருந்தது.

மனோரமா மேக் அப் போட்டுக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் சுந்தரம் இறந்துவிட்டார் என்று ஸ்டூடியோவுக்கு செய்தி வந்தது. மனோரமா அலறித் துடித்தார். மேக் அப்பைக் கூடக் கலைக்காமல் சுந்தரத்தின் பங்களாவுக்கு விரைந்து சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

(தொடரும்)

# "ரக்பி" நட்சத்திரம் தாஜுதீன்...

(18 ஆம் பக்கக் கட்டுரையின் தொடர்ச்சி)

அவரது கார் நாரஹென்பிட்டியவிலுள்ள 'ஷாலிக்க' மைதானத்திற்கு அருகிலுள்ள சுவரொன்றில் மோதி எரித்ததால் ஏற்பட்ட எரிகாயங்கள் காரணமாகவே அவருக்கு மரணம் சம்பவித்ததாக ஏற்கனவே கூறப் பட்டிருந்தபோதிலும் அவரது 'பர்ஸ்' சம்பவ இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலும் அவரது செல்லிடத் தொலைபேசி அவர் மரணித்த இடத்தி லிருந்து சில நூறு கிலோ மீற்றர் தொலைவிற் கப்பால் நுவரெலியாவிலும் காணப்பட்டது எப்படி என்பது அதிசய மான ஒன்றாகவே இருந்தது.

அதேநேரம் ஒரு விபத்து மரணமாக தாம் அறிவித்திருந்த தாஜுதீன் மரணத்தை கொழும்பு பிரதம சட்ட மருத்துவ அதிகாரியாக அப்போதிருந்த பேராசிரியர்- டாக்டர் ஆனந்த சமரசேகரவும் தனது ஆரம்ப மற்றும் இடைக்கால சடல பரிசோதனை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து அதுபற்றிய உண்மைகளை வேண்டுமென்றே மறைத்துவிடுவதற்கு உள்நோக்குடன் கூடிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதாக நாரஹென்பிட்டிய பொலிஸ் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எப்படியும் முதலில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி சடல பரிசோதனை அறிக்கைகளுடன் முரண்படுவதாகவே அரச இரசாயன பகுப்பாய்வாளரது அறிக்கை அமைந்திருந்தது. அதாவது தாஜுதீனுடைய உடலத்தின் சுவாசப்பையில் கார்பன் மொனோக்ஸைட் மூலக்கூறுகள் காணப் படாததே அதுவாகும்.

"தாஜுதீனின் மரணம் எரிகாயங்களால் உண்டான ஒரு விபத்து மரணமே என சம்பவத்தை வகைப்படுத்துவதில் தனிப்பட்ட விதமான அக்கறை எடுத்துக் கொண்டதாக முன்னாள் 'DIG' அனுரசேன நாயக்கவுக்கெதிராக பலத்த எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன. மரணத்திற்குப் பின்னர் அரச இரசாயன பகுப்பாய்வாளரது அறிக்கை வெளி வந்து 2 1/2 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னரே பொலிஸ்மா அதிபர் ('IGP') என்.கே. இலங்கக்கோன் கடந்த பெப்ரவரியில் 'CID' யின் புலனாய்வு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருந்தார். புலனாய்வு நடவடிக்கைகளின் போது பல குறைபாடுகள் கண்டுகொள் ளப்பட்டதுடன் சம்பவ இடத்தில் இருக்கக்கூடிய 'CCTV' படக்கருவிகளின் விபத்துப் பற்றிய உடனடிப் பதிவுகளுங்கூட பெற்றுக்கொள்ளப்படாதது பெரும் புதிராகவேயுள்ளது. புலனாய்வாளர்களுக்கு இப்பதிவுகள் கிடைக்காது போன காரணம் என்ன? இறந்தவரின் செல்லிட தொலைபேசியை தேடிப் பெற்று அதன் உள்-வெளி அழைப்பு விபரங்கள் பெறப்படாதது திட்டமிடப் பட்ட செயலாகவே தோன்றுகிறது. சம்பவ இட அயற் பகுதிகளிலும் ஷாலிக்க மைதான காவலாளியிடமும் முறைப்படி சரியான ஆதாரங்களுங்கூட பெற்றுக்கொள்ளத் தவறியுள்ளனர். அங்கு தீப்பரவல் ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டு கொள்வதற்காக தீயணைப்புப் படை அதிகாரிகளிட முங்கூட ஆதாரங்கள் பெறப்படவில்லை" என்றே பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

பெறப்பட்ட தகவல்களின்படி இறந்தவரது உடலத்தின் முழங்கால் பகுதியின் பின்புறத்திலேயே நொருங்கிய கண்ணாடித் துகள்கள் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் காரின் உள்ளே உடைந்த போத்தலெதுவும் இருந்ததா என்பது உறுதிப்படுத் தப்பட்டதாகவும் இருக்கவில்லை.

"தாஜுதீனின் உடற் காயங்களை நன்கு பரிசோதிப்பதன் மூலம் அவை எவ்விதம் ஏற்பட்டன, எதனால் ஏற்பட்டன போன்ற விபரங்களுடன் அதனது முழங்கால் பிற்பகுதியில் காணப்பட்ட கண்ணாடித் துகள்கள் எங்கிருந்து வந்தன என்ற விடயங்களையும் உறுதிப் படுத்தியிருக்கலாம் என்பதால் பேராசிரியர் ஆனந்த சமரசேகரவுங்கூட இதனாலாகும் விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்றே நம்பப்படுகிறது. அங்கு காணப்பட்ட அந்த கண்ணடித் துகள்கள் அரச பகுப்பாய்வாளரது பரிசோதனைக்கு ஏன் அனுப் பப்படவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியதாகவே இருக்கிறது. பேராசிரியர் சமரசேகர ஒரு மருத்துவ நிபுணர் என்ற மட்டில் அவர் இவ்விதம் புலன் விசாரணைகளுக்கு தடங்கல் ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொண்ட இத்தகைய முயற்சி அவர் தனது பணி மட்டில் ஏற்கனவே எடுத்துக்கொண்டிருக்கும் சத்தியப்பிரமாணத்திற்கு மாறானதாக இல்லையா?" என்றே அவ்வட்டாரங்கள் ஆச்சரியப்படுகின்றன.

புலன் விசாரணைகளில் 'டயலொக் ரெலிகொம்' நிறுவனம் ஒத்துழைக்க தவறியிருந்தது என்ற குற்றச்சாட்டின் பேரில் அதன்மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரும்புவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

"குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சிலரது தொலைபேசி அழைப்புகள் பற்றிய விபரங்கள் தரும்படி டயலொக் நிறுவனத்திடம் பல தடவைகள் கோரியிருந்த போதிலும் மூன்று மாதங்கள் வரையிலான விபரங்கள் மட்டுமே தம்மிடம் இருப்பதாக கூறி அவ்விபரங்களை அவர்கள் வழங்கவில்லை.

(தொடரும்)

தமிழில்- யோகர்

ஆவினுக் அருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டமில்லது.
– தேவாரம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## ஏங்கி ஓடும் பசுக்களை காப்பாற்ற யாரும் இல்லையோ!

தாய்க்கு அடுத்தபடியாக பசுவை போற்றும் மரபு தமிழ் மக்களுடையது. பாலைப் பொழிந்து தரும் பசுவை தாயாகப் போற்றுகின்ற தமிழ் இனத்தில் இன்று மாட்டிறைச்சிக் கடைகளுக்கு குறையே இல்லை.

இத்தகைய அபத்தமான நிலைமை எதிலும் கவனமற்ற சைவத் தமிழர்களால் ஏற்பட்டதுதான். ஆமையை இறைச்சிக்கு வெட்டினால் அது கடும் குற்றம்.

கௌதம புத்தபிரானின் ஒரு அவதாரம் என்ற அடிப்படையில் ஆமைக்குப் பாதுகாப்பு. அதேபோல் பன்றி இறைச்சிக் கடைக்கு அனுமதியே இல்லை. முஸ்லிம் மக்களுக்கு ஒவ்வாது என்பதால் பன்றி இறைச்சிக்கு தடைவிதிப்பு.

ஆனால் சைவத் தமிழர்கள் தெய்வமாகப் போற்றும் பசுவை வெட்டினால் யார் கேட்பது? அதனால் சிவபூமி என்று போற்றப்படும் யாழ்ப்பாண மண்ணில் மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

இந்தக் கொடுமைக்கு எதிராக என்று கண்டனங்கள் எழுகின்றனவோ அன்றுதான் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

இது ஒருபுறம் இருக்க, தீவக மண்ணில் இருக்கக் சவடிய கட்டாக்காலி மாடுகளை சட்டவிரோதமாக வெட்டுகின்ற நெட்டூரம் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இத்தகைய கொடுஞ் செயலில் கர்ப்பமான பசுக்களும் வெட்டப்படுகின்றன என்பதை அறியும் போது இதயம் கருகிப்போய் விடுகிறது.

இந்த உலகில் மனிதர்களுக்கு அடுத்தபடியாக கண்ணீர்விட்டு அழுது தன் துன்பத்தை தெரிவிக்கும் பக்குவம் மாடுகளுக்கு மட்டுமே உண்டு.

தன் கன்றைக் காணவில்லையென்றால் பசுக்கள் கதறியழும். கன்றைக் காணாத பசுவின் கண்களால் கண்ணீரோடும். இதற்கு கண்ணீர் ஓடி வழிந்த அடையாளமே சாட்சியமாகும்.

இதனால்தான் தன் ஆன்கன்றை இழந்த பசு, மனுநீதி சோழ மன்னனின் அரண்மனை நோக்கிச் சென்று ஆராய்ச்சிமணியை இழுத்தடித்தது.

இச் செய்தியை குறிப்பிட்ட சேக்கிழார் பெருமான் ... தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்த இத் தன்மை என்றார்.

மணியை அடித்தது தாய் என்று உயர்வு படுத்திச் சொல்வதற்குள் தமிழர்கள் பசுவை தாயாக – தெய்வமாக போற்றினர் என்பது புரியப்படும்.

தன் கன்றைக் காணாத பசு கண்ணீர் விட்டு அழுவது மட்டுமல்ல; அடிவயிற்றிலிருந்து பெரும்மூச்சு எடுத்து ஏங்கிக் கொள்வதென்பது மிகப்பெரிய துன்பத்தின் வெளிப்பாடு.

அந்தளவிற்கு ஒரு தாயின் அன்பை – பாசத்தை கொண்டு பாலைத்தரும் பசுவை, எருதை தெய்வமாக போற்றவேண்டிய நாம் அதை துரத்தி துரத்தி வெட்டிச் சரிக்கிறோம் என்றால் இந்த மண்ணில் சைவ அமைப்புகள் இருந்து என்ன பலன்? பசுவதை தடைச் சங்கங்கள் அமைத்தென்ன பலன்?

ஓ அன்புக்குரியவர்களே! தீவகத்தில் பசுக்கள் தங்கள் கன்றுகளோடு ஓடுகின்ற துன்பத்தை ஒரு கணம் பாருங்கள். இன்று யார் கொல்லப்படுவரோ, எந்தக் கன்று தன்தாயைத் தந்தையை இழக்குமோ என்று தெரியாமல் ஓடுகின்ற மாட்டினைக் காக்க யார் உளர்?

நாளும் பொழுதும் நடக்கின்ற பசு நிந்தையின் பாவம் நம்மைச் சும்மாவிடுமா? பொறுப்பான அதிகாரிகளே! சைவசமய அமைப்புகளே பசுவை மாட்டினத்தை வதைப்பதை, கொல்வதை உடன் நிறுத்த வீறுகொண்டு எழுங்கள். உங்களின் எழுச்சி சிவபூமியை பாவத்திலிருந்து காக்கும். காலம் பிந்தாதீர்கள்.

# கடந்த அரசாங்கத்தின் வேலைகளில் ஜனாதிபதி மைத்திரிக்கும் பங்குண்டு

## அன்றைய அமைச்சரவையில் அவரும் இருந்தார் – மகிந்த

(கொழும்பு)

அன்றைய அரசாங்கம் செய்த வேலைகள் குறித்து தற்போதைய அரசாங்கம் குற்றம் சுமத்தி வருகிறது எனவும்தான் அந்த வேலைகளை தனித்து செய்யவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட அன்றைய அமைச்சரவையுடன் இணைந்து அவற்றை செய்ததால், தற்போதைய ஜனாதிபதியும் அதற்கு பொறுப்பாளி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதிக்கு அந்த பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது. இதனால், எதிர்க்கட்சியை திட்டிக்கொண்டிருக்காது மக்களுக்கு வேலை செய்யுங்கள். 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த போது, விவசாயத்திற்கான நீர்ப்பாசன கால்வாய்களுக்கு பணத்தை செலவிடப் போவதில்லை எனக் கூறியிருந்தது.

வயல்களை நிரப்பி. தொழிற்சாலைகளை நிர்மாணிக்க வேண்டும் என்பதே இதற்கு காரணம். எனினும் மக்கள் அந்த கொள்கையை நிராகரித்தனர்.

ஆனால், தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரையும் இணைத்துக் கொண்டு அந்த கொள்கையை செயற்படுத்த போகின்றனர் என்பதே எமக்குள்ள கவலையாகும்.

நாங்கள் பசளை நிவாரணங்களை வழங்கியதால், அரிசி உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்தது.

பசளை நிவாரணங்களை வழங்காதிருந்தால், அந்த நிலைமை உருவாகி இருக்காது.

பசளைகளில் நச்சு பொருட்கள் இருப்பதாக கூறி தற்போது பசளை நிவாரணத்தை நிறுத்தியுள்ளனர்.

பசளைக்கு பதில் பணம் தருவதாக கூறுவது வெறும் கதை.

நெல் உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாதுள்ளது.

பிள்ளைகள் வீட்டில் பட்டினியில் அழும் போது, 25 ஆயிரம் ரூபாயை கொடுத்து, பசளையை கொள்வனவு செய்வார்களா, பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுப்பார்களா? விவசாயி மது அருந்து பவராக இருந்தால், அந்த பணததை அதற்கு பயன்படுத்துவார்.

வைத்தியசாலைகளில் தற்போது மருந்துகள் இல்லை. தனியார் மருந்தகத்தில் வாங்கி கொள்ளுமாறு எழுதி கொடுக்கின்றனர்.

இதுதான் உண்மை. எனினும் எம்மீதே குறை கூறுகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## அறிவுரை கூறிய பொலிஸ் அதிகாரியின் மர்ம உறுப்பைக் கடித்த நபர்கள்!

(கொழும்பு)

பொது இடத்தில் மது பானம் அருந்தவேண்டாம் என கூறிய பொலிஸ் அதிகாரி ஒருவரின் அந்தரங்க உறுப்பை கடித்த இருவர சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கொஸ்கொட பகுதியில் பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும், தெரியவருவதாவது,

கொஸ்கொட, துவேமோதரவில் பொது இடத்தில் இருவர் மதுபானம் அருந்தி கொண்டிருந்துள்ளனர்.

இதை அவதானித்த பொலிஸ் உத்தியோகத்தர் அவர்களை கண்டித்துள்ளார்.

இதனையடுத்தே மது போதையில் இருந்த இருவரும் சேர்ந்து, பொலிஸ் உத்தியோகஸ்தரின் அந்தரங்க உறுப்பை கடித்து காயப்படுத்தியுள்ளனர்.

இதனால்காயங்களுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகஸ்தர், பலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-12)

## லாகூர் பயங்கரவாத தாக்குதல்; ஜனாதிபதி மைத்திரி கண்டனம்

(லாகூர்)

அப்பாவி பொதுமக்களை இலக்கு வைத்து பாகிஸ்தானின் லாகூர் நகரில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலை தான் வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் அவர்களுக்கு அனுப்பி வைத்த விசேட செய்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகையில், சோகமான இச் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு பாகிஸ்தான் அரசாங்கத்துடனும் மக்களுடனும் ஒன்றிணைந்து சோகத்தில் பங்குகொள்வதாகத் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு இலக்கான குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்த ஜனாதிபதி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைவதற்கும் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

தமது நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஆசியாவின் அரசாங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பாகுமென ஜனாதிபதி தனது செய்தியில் மேலும் தெரிவித்தார். (செ-11)

## க.பொ.சா/த பரீட்சை பெறுபேறுகள் 2015

**மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்**

கு. விதுசன் - 8ஏசி, இ.புலோஜன்- 7ஏபிஎஸ், தே.ஜதுசா-6ஏபி2சி, தே. லொசான்-6ஏபிசிஎஸ், த. யமுனா பிரியதர்சினி-5ஏ2பிசிஎஸ். (2)

## பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவு அதிகரிப்புக்கு ஆதரவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதில் தவறில்லை என்று ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயாகமகே தெரிவித்துள்ளார்.

மேலும் சமூக சேவைகளில் ஈடுபடும் நோக்கில் பாராளுமன்றத்திற்கு வருகைத் தரும் உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்படும கொடுப்பனவுகள் போதுமானதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமது வருமானத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகரித்துக் கொள்வதற்காக சட்டவிரோத வருமானத்தை பெறும் வழிகளுக்கு செல்வார்களானால் அது மோசமான விபரீதத்தை ஏற்படுத்தும் என்றும் தயாகமகே தெரிவித்துள்ளார்.

நேற்று அம்பலாங்கொடை விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய நிலையில் இலங்கை பிரஜைகள் ஒவ்வொருவரும் 5 இலட்சத்துக்கு அதிகமாக கடனாளிகளாக்கப்பட்டுள்ளனர். இந்த கடன் சுமையிலிருந்து மக்கள் மீள வேண்டும் எனில எமது நாட்டின் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

(கொழும்பு)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **மன்னார் பிரதேசத்தில்** அரிப்பு, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நண்பா ஏன் அழுகிறாய்? உனக்குள் எல்லாச் சக்தியும் உள்ளது. பலசாலியே உனது எல்லாம் வல்ல இயல்பை வரவழை. மூவுலகும் உனது காலடியில் அமரும். வெல்வது ஆன்மா ஒன்றே. சடலமல்ல. உடல்களோடு தம்மை ஒன்று படுத்திக் கொள்ளும் மூடர்களே பலவீனர்களே, பலவீனர்கள், நாங்கள் பலவீனர்கள் என்று இரக்கமெழக் கதறுவார்கள். நாடு வேண்டுவது துணிச்சலும் விஞ்ஞான அறிவும் மிக்க தீரமும் பேராற்றலும் அளவில்லா ஊக்கமுமே. பேடித்தனம் உதவாது. சிங்கத்தின் தீரமுள்ள செயல் வீரனையே திருமகள் நாடுவாள். பின்னால் பார்க்கவேண்டியதே இல்லை. முன் செல்க! எல்லையில்லா வலிமையும் எல்லையில்லாத ஊக்கமும் எல்லையில்லா தீரமும் எல்லையில்லாத பொறுமையும் நமக்கு வேண்டும். அப்போது தான் பெரும் பணிகளை ஆற்ற இயலும்.

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்

# யூனியன்ஸ் அணியை வீழ்த்தி திருநெல்வேலி சி.சி. காலிறுதிக்கு தகுதி

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற் காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்திவரும் 30 பந்துபரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 8 ஆவது போட்டி கடந்த சனிக்கி ழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக் குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில்திருநெல்வேலிசி.சி. அணி யூனியன்ஸ் அணியை 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று காலிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 29.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களை பெற்றனர். தயாளன் 37, ஆகிசன்-24, றான்சன்-26, கிரிசாந்-24, ரகுபதி-21 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் திருநெல்வேலி சி.சி. அணியை சார்ந்த விதுண்- 03, சுரேஸ் 02, பிரதீப்-01, சுரேந்திரன்-01, பிருந்தாபன்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி. அணி 30 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றனர். விதுன்-72, பிருந்தாபன் ஆட்டமிழக்காது 44, சுரேஸ்-18ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் யூனியன்ஸ் அணியை சார்ந்த தனுஸன்-04, அருண்-03 இலக்குகளை கைப் பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யூனியன் அணி 2.41 புள்ளிகளை யும் திருநெல்வேலி சி.சி.அணி 6.03 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)

## இன்றைய போட்டிகள்

97 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கரப்பந்தாட்ட (ஓவர்கேம்) சுற்றுப்போட்டி சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய A அணியும் நிகாந்தி சனசமூக நிலைய B அணியும் மோதவுள்ளன. தொடர்ந்து நடைபெறும் போட்டியில் அரியாலை சனசமூக நிலைய B அணியும் அருணோதய சனசமூக நிலையமும் மோதவுள்ளது.

◆◆◆◆

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்லூட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## யாழ்.வலய கரப்பந்தாட்டம்

## ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி சம்பியன்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 15வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி சம்பியனானது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா .வித்தியாலய அணி மோதியது.

முதல் செற்றில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:19 என்று முன்னிலை வகித்தது. இரண்டாவது செற்றில் கோப்பாய் மகா வித்தியாலய அணி 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பதிலடி கொடுக்க இறுதி செற்றில் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை ஏற்பட்டது.

இதில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச்சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

மூன்றாமிடத்தை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி பெற்றது. (க)

## பருத்தித்துறை பிர.செயலக எல்லே சுற்றுப் போட்டி

## சென்.தோமஸ் வெற்றி



வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குள் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வில் ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இவ்விளையாட்டு நிகழ்வின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை புலோலி வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை முனையைச் சேர்ந்த சென். தோமஸ விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் பருத்தித்துறை முனையைச் சேர்ந்த சென். தோமஸ விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இவ்விளையாட்டு நிகழ்வில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட புனித தோமையார் விளையாட்டுக்கழக வீரர்களை படத்தில் காணலாம். (க)



நல்லூர் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் கே.சி.சி.சி. வி.கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை ஐக்கிய கழகம். அவ் அணியினரை படங்களில் காணலாம்.

# சிற்றி ஸ்போட்ஸ் சென்ரர் நடத்திய மாவட்ட ரீதியிலான துடுப்பாட்ட சுற்றுத் தொடர்

## இணுவில் கலைஒளி சம்பியன்

நெல்லியடி சிற்றி ஸ்போட்ஸ் சென்ரர் நடத்திய யாழ்.மாவட்ட ரீதியான அணிக்கு 11 பேர் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இறுதிப்போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியனானது இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம்.

மேற்படி போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியானது இரண்டு இனிங்ஸ்களை கொண்டதாக போடடி அமைந்தது. அதற்கமைய நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஞானம்ஸ் அணித் தலைவர் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

அதற்கமைய 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து கலைஒளி விளையாட்டுக்கழகம் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது.





கலைஒளி விளையாட்டுக்கழகம் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. 13 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களை பெற்றது.




4 பந்துப் பரிமாற்றங்களில் 64 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கினை நோக்கி கலைஒளி வீரர்கள் துடுப்பெடுத்தாட களமிறங்கினர்.

கலைஒளி விளையாட்டுக்கழக ஆரம்ப வீரர்களான பிரதீஸ் மற்றும் மோகன்ராஜின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 2.3 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றியிலக்கை அடைந்தனர். இதன்மூலம் சிற்றி ஸ்போட்ஸின் கிண்ணத்தை தன்தாக்கிக் கொண்டது இணுவில் கலைஒளி.

ஆட்டநாயகனாக கலைஒளி வீரர் மோகன்ராஜும் தொடர் ஆட்டநாயகனாக பிரதீஸும் தெரிவாகினர்.

மேலும் அதிகூடிய இலக்குகளை சாய்த்த வீரராக கலைஒளி வீரர் ஜீவியும் அதிகூடிய ஆறு ஓட்டங்களை பெற்ற வீரராக கலைஒளி வீரர் மோகன்ராஜும் தெரிவாகினர். (க)

# அதி உஷ்ணமான வானிலை...

த்து தெரிவித்த கொழும்பு பல்கலைக்கழகம் புவியியல் பிரிவு பேராசிரியர் எஸ். ஏ நோபட்,

வழக்கத்துக்கு மாறாக இம்முறை மார்ச் மாதத்தில் மிக்க கூடுதலான வெப்பநிலை காணப்படுவதை அவதானிக்கலாம்.

வளிமண்டலத்தில் ஏற்படுகின்ற வெப்பநிலை அதிகரிப்பு, பச்சை வீட்டுவாயுக்களின் காரணமாக, மனித செயற்பாடுகளின் காரணமாக காபனீரொட்சைட், மெதேன் போன்ற வாயுக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, எல்நினோவினுடைய தாக்கத்தின் காரணமாக என்சோவினுடைய தாக்கத்தின் காரணமாக ஏற்படுகின்ற மாற்றங்கள் என பல்வேறு வகையான காரணிகளும் இணைந்து இந்தமாதத்தினுடைய வெப்பநிலையை மிக உயர்வாக அதிகரிதிருக்கின்றன.

குறிப்பாக உலகினுடைய சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலை சாதாரண அளவைக் காட்டிலும் 1.35 பாகை செல்சியஸ் அதிகரிப்பு, 1951 தொடக்கம் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியை காட்டிலும் மிக உயர்வாக காணப்பட்டிருக்கின்ற தன்மை புலப்படுகின்றது.

எனவே வருகின்ற மாதமும் இந்த மிக உயர்வான வெப்பநிலை கொண்டதாக காணப்படும். இதன் விளைவாக மக்கள் மிக கவனமாக இருக்க வேண்டியது அவசியமானது எனத் தெரிவித்தார்.

மேலும் தொடரும் உஷ்ணமான காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். நீர் மின் உற்பத்தி தற்போது 18 வீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 40 வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது.

சில நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 16 அல்லது 20 வீதமாக குறைவடைந்துள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு மின சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் மின்சாரத்தை துண்டிக்காமல் தொடர்ந்து விநியோகிக்க முயற்சிப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று நாட்டின் சில பிரதேசங்களில் மழை பெய்துள்ளது.

நேற்று பிற்பகல் 3.30 வரையான 24 மணித்தியாலத்தில் நுவரெலியா மாவட்டத்திற்கு அதிக மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் அங்கு 38.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# 67 அடி உயர புத்தர் சிலை...

நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதனால் கடல் வெளிப்பரப்பில் நாகபூசணி அம்மன் ஆலயம் மறைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப்பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

நான் அங்கு சென்று பார்த்தேன். விகாரை ஒருபக்கத்திலும் கோவில் ஒருபக்கமும் அமைந்துள்ளது. அமையவுள்ள சிலை ஒரு போதும் கோயிலை மறைக்காது.

கண்டியில் தலதாமாளிகை, கோயில், பள்ளிபோன்ற சமய ஸ்தலங்கள் அருகருகே எந்தபிரச்சினையும் இன்றி அமைந்துள்ளன.

அதேபோல நாகதீப பன்சாலையிலும் யாழ்.நாகவிகாரையிலும் இந்துகடவுள்களின் சிலைகள் உள்ளன.

இந்த நிலையில் கோயிலை மறைத்து சிலை அமைக்க முயற்சி என்று வடக்கில் உள்ள ஊடகங்கள் செய்தியைவெளியிடுகின்றன.

சிலைவைப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. ஊடகங்கள் சரியாகபுரிந்து கொள்ளாமல் செய்திகளை வெளியிடுகின்றன.

குறித்த சிலை நிறுவுவதற்கு கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதிகிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளகாரணத்தால் குறித்தசிலை நிறுவும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அவர்களின் அனுமதி கிடைத்தவுடன் சிலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக நயினாதீவு நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீவிமலதேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாகதீப பிரதேசத்தில் சகலருடைய அனுமதியையும் பெற்றே இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக பிரதேச செயலர், வடமாகாண கடற்தொழில் சங்கங்கள் மற்றும் கடற்தொழில் அமைச்சின் அனுமதியினை பெறநயினாதீவு நாகவிகாரைக்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட இடப்பரப்பில் 67 அடி உயரத்தில் புத்தர் சிலை அமைப்பதற்கான அனுமதிகளை பெறும் பொருட்டு உரியறுள்ளோம்.

பௌத்த அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த டிசம்பர் மாதம் குறித்த சிலை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டியிருந்தார்.

அதேபோன்று சுற்றுச் சூழல் பிரதி அமைச்சர் அனுர ஜெயலத் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிலை அமைப்பதற்கான பணிகளை தொடங்குங்கள் என தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போது கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைக்காத காரணத்தால் அநாவசியமான பிரச்சினைகள் வருகின்றன என தெரிவித்தார்.

நயினாதீவு நாகவிகாரைக்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட இடப்பரப்பில் 67 அடி உயரத்தில் புத்தர் சிலை அமைப்பதற்கான அனுமதிகளை பெறும் பொருட்டு உரிய விண்ணப்பங்கள் பிரதேச செயலக மட்டத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு யாழ் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி பெற்றபின்னரே குறித்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். எனவே கரையோர பாதுகாப்புத் திணைக்கழத்தின் அனுமதியை பெற்றபின்னர்தான் சிலை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும் என யாழ் மாவட்ட அரச அதிபரால் நாகதீப விகாராதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ் மக்களின் வரலாற்று பிரசித்திபெற்ற இடமாகவும் இந்து சமயத்தின் தொன்மையான வரலாற்றை கொண்டமைந்த பூமியாகவும் உள்ள நயினாதீவில் இவ்வாறான ஒரு பாரிய சிலை அமைக்கப்பட்டால் அது அடியோடு இந்து சமயத்தையும் தமிழ் மக்களின் வரலாறுகளையும் சிதைத்து விடும்.

இந்த கட்டுமானப்பணிகள் இன்னும் சில தினங்களுக்குள் தொடர உள்ளமையால் அனைவரும் இதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். இதற்காக மக்கள் எதிர்ப்பொன்று அவசியம் என சுட்டிக்காட்டியுள்ள தமிழ் தரப்புக்கள், எதிர்ப்பு இல்லாவிட்டால் நயினாதீவு கோபுரத்தினை மறைக்கும் பிரமாண்டமான ஒரு புத்தர் சிலை கடலின் நடுவே தோற்றம் பெறுவதனை தடுக்க முடியாது போய்விடும் எனவும் கவலை தெரிவித்துள்ளனர். (செ-9,4)

# மின்வெட்டு...

மின்சார சபை வாபஸ் வாங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

நேற்று தொடக்கம் நாளை மறுதினம் 31-ம் திகதி வரை இந்த மின் வெட்டு நடைமுறைப்படுத் தப்படும்என ஏற்கெனவே நேற்றுமாலை மின்சார சபை அறிவித்திருந்தது.

இந்த அறிவித்தலுடன் மின்வெட்டு நேர அட்டவணையையும் மின்சார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இலங்கை மின்சார சபை, மின்தடை குறித்த தீர்மானத்தை கைவிட்டுள்ளதாக நேற்றிரவு அறிவித்துள்ளது. (செ-11)

# வடக்கு வெசா...

யும் தெற்கையும் ஒன்றிணைக்கும் நோக்குடன் எதிர்வரும் மே மாதம் வெசாக் பண்டிகை இம் முறை கொண்டாடப்படவுள்ளது.

அனைத்து சமயத்திலும் சமாதானத்தைமுன்னெடுக்கும்படியாகத் தான் போதனைகள் இடம்பெற்றுள்ளன.

அதே போல் முழு நாட்டுக்குமான நிகழ்வுகளாக பண்டிகைகள் நடைபெற்றன.

இந்தவகையில் இம்முறை பூநகரி மகாவித்தியாலத்தில் மிகப் பெரிய வெசாக் தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

அதில் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி கருணா நிலையத்தில்உள்ள பிள்ளைகளுக்கு பகல் உணவும், அதே இல்லத்தில் உள்ள 25 குடும்பங்களுக்கு 25 பசு மாடுகள் கொடுக்கப்படவுள்ளது.

மேலும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 10 ஆயிரம் பேருக்கு மதிய உணவு கொடுக்கப்படவுள்ளது.

ஆயிரம் பேருக்கான குளிர் பானம் கொடுக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இருந்து நாக விகாரை வரையான வீதிகளில் தோரணங்களும் வெசாக் கூடுகளும் அமைக்கப்படவுள்ளன.

முதன் முறையாக பிரித் தமிழ் மொழியில் ஓதுவதற்காக பௌத்த பிக்குவை ஆயத்தம் செய்துள்ளோம். அவர் பௌத்த உபதேசங்களை தமிழில் சொல்லுவார்.

வடக்கில் இருந்து தென்பகுதி செல்வது வழமை ஆனால் இந்த முறை தெற்கில் இருந்து வடக்கிற்கு மக்களை அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இதன் மூலம் பொருளாதாரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். இம்முறை நடைபெறவுள்ள அனைத்து சமய நிகழ்வுகளையும் முழு இலங்கைக்குமான ஒரு நிகழ்வாக வடக்கில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# நல்லாட்சி அரசாங்கத்தை....

ந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக பேசுவதை இந்த காலத்தில் இனவாதம் என வர்ணிக்கின்றனர் எனவும் இவ்வாறு நாட்டுக்காக பேசிய 48 பிக்குமாரை அரசாங்கம் கைது செய்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பௌத்த துறவிகளின் குரல் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கம்மேற்கொண்ட அபிவிருத்திகளை தற்போதைய அரசாங்கம் அழித்து வருகிறது. ஜா-எல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நடை பயிற்சி செய்யும் பாதையில் பதிக்கப்பட்டுள்ள கற்கள் இரவு நேரங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து 14 மாதங்கள் ஆகியுள்ள நிலையில், அரசாங்கம் ஆடிய ஆட்டமும் இல்லை. மேளமும் உடையவில்லை.

பிக்குமாருக்கு எதிரான அடக்குமுறை மற்றும் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஏப்ரல் 6 ஆம் திகதி கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் புத்தர் சிலைக்கு அருகில் எதிர்ப்பு கூட்டம் நடத்தப்படும்.

தற்போதைய அரசாங்கம்தொடர்ந்தும் மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டால், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைக்க தயார்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசாங்கத்தை மண்டியிட வைத்த பௌத்த மத தலைவர்களுக்கு, இந்த அரசாங்கத்தை மண்டியிட வைப்பது பெரிய காரியமல்ல எனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மிகத் தீவிரமான ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# காணாமல்போன மகனின்...

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவினுடைய விசாரணைகளின் போது சாட்சியமளித்தார்.

காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவினுடைய விசாரணைகள் நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆணைக்குழு வின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் இடம் பெற்றது.

ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் மூன்று ஆணையாளர்கள் உள்ளடங்கலாக குறித்த விசாரணை கள் இடம் பெற்றது. இதன் போது கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே குறித்த தாய் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் சாட்சியம் அளிக்கையில், சிலாபத்துறை சவேரியார்புரத்தைச் சேர்ந்த நாங்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த நிலையில் மன்னார் பெரியகமம் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம்.

கடந்த 19.03.2008 அன்று இரவு எனது மகன் மன்னார் பெரியகமம் கிராமத்தில் உள்ள இல்லத்தில் இருந்து சம்போ வேண்டுவதற்காக கடைக்குச் சென்றார். எனினும் வீடு திரும்பவில்லை.

எனது மகன் யோகநாதன் குருசேத்மன் காணாமல் போகும் போது அவருக்கு வயது-19. மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தார்.

கடைக்குச் சென்ற மகன் வீடு திரும்பாத நிலையில் நாங்கள் அச்சத்தில் இருந்தோம். எனது கணவர் மகனை தேடிய போதும் மகன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் எனது கணவர் கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். நான் தற்போது யாரும் அற்ற நிலையில் தனிமையாக எவ்வித உதவிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றேன். பல்வேறு துயரங்களையும் சந்தித்து வருகின்றேன்.

இந்த நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவுடன் நான் எனது மகன் தொடர்பாக அடிக்கடி தொடர்பில் இருக்கின்றேன். அந்தவகையிலே இடம்பெற்ற சாட்சியம் வழங்கும் நிகழ்வில் என்னை கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி நான் சாட்சியம் வழங்க வந்தேன். ஆனால் இது வரைக்கும் எனது மகனைப் பற்றி எவ்விதத்தகவல்களும் இல்லை.

நான் எவ்வித உதவிகளும் இன்றி வாழ்ந்து வரும் நிலையில் எனது மகனை தேடி கண்டுபிடித்து தாருங்கள் என ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என குறித்த தாய் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார். (செ-4)

# தான் கைது செய்யப்படுவதை...

அடிப்படை உரிமை மீறல் மனு மீது உச்ச நீதிமன்றம் உத்தரவு எதுவும் பிறப்பிக்காமல் ஒத்தி வைத்ததுள்ளது.

இந்த வேண்டுகோள் முதலில் மாஜிஸ்ட்ரேட் நீதவான் முன் சமர்ப்பிக்கப் படவேண்டுமென்று கூறிய தலைமை நீதிபதி ஸ்ரீபவன் இந்த விஷயத்தை உச்ச நீதிமன்றம் முன்பாகக் கொண்டு வருவதை அனுமதிக்க முடியாதென்று தெரிவித்தார்.

அப்போது பசில் ராஜபக்ஷ சார்பில் ஆஜரான வழக்கறிஞர், பொது அரச சொத்துக்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால் அவருக்கு பிணை வழங்க மாஜிஸ்ட்ரேட் நீதவானுக்கு அதிகாரங்கள் இல்லை என்று தெரிவித்தார்.

இதன் காரணமாகவே, தாங்கள் உச்ச நீதிமன்றத்தை நாடியதாகவும் அவர் கூறினார்.

ஆனால் இந்தக் கருத்துக்களை நிராகரித்த தலைமை நீதிபதி, அரச சொத்துக்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க மாஜிஸ்ட்ரேட் நீதவானுக்கு அதிகாரங்கள் இருப்பதாக தெரிவித்ததோடு, கடந்த காலத்தில் பல சந்தேக நபர்களுக்கு மாஜிஸ்ட்ரேட் நீதிபதிகள் பிணை வழங்கியுள்ளதாகக் கூறினார்.

இதனால், தடை உத்தரவைப் பிறப்பிக்க மறுத்த நீதிமன்றம் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் தேதி வரை ஒத்தி வைத்து உத்தரவிட்டது.

அரச நிதி மோசடி தொடர்பாக பொலிஸார் தன்னைக் கைது செய்ய முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக நீதிமன்றத்தில் மனு மூலம் தெரிவித்துள்ள பசில் ராஜபக்ஷ அதனை தடை செய்யும் உத்தரவொன்றை பிறப் பிக்குமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சந்தேக...

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் சட்டத்தரணிக்கு மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார். புங்குடுதீவு மாணவி கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்படும் போது, அதனை நேரில் கண்கண்ட சாட்சியம் இருப்பதாக குற்றப்புலனாய்வுதுறை பரபரப்பு தகவல் ஒன்றினை நீதிமன்றில் கடந்த வழக்கு தவணையின் போது தெரிவித்திருந்தது.

இந்த சாட்சியம் தொடர்பில் தாம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் சி.ஐ.டி. கூறியிருந்தது. மேலும் குறித்த சந்தேக நபர்களது தொலைபேசி பதிவுகள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றதாகவும் கூறியது. இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, டி.என்.ஏ அறிக்கை மற்றும் சான்றுபொருட்களின் பகுப்பாய்வு அறிக்கைகள் என்பன குற்றப்புலனாய்வு பொலிஸாரால் நேற்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வில்லை.

இதன்போது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிருந்த சட்டத்தரணி சந்தேக நபர்களுடன் கதைக்க வேண்டும் என மன்றில் அனுமதி கோரினார். இதன்போது சந்தேகநபர்களில் 5ஆம் மற்றும் 6ஆம் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் விசேட அனுமதியைப் பெற்றுச் சந்திக்க முடியும் என்றும் அவர்களை சாதாரணமாகச் சந்திக்க முடியாது எனவும் ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம்.றியால் தெரிவித்தார். இவ்வழக்கில் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜோய் மகிழ் மகாதேவா, அசேல டி சில்வா ஆகியோர் ஆஜராகி இருந்தனர். வழக்கு மீண்டும் அடுத்த மாதம் பதினோராம் திகதி எடுத்துக்கொள்ளப் படவுள்ளது. மேலும் வழக்கு முடிவுற்று சந்தேக நபர்கள் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்படும் போது, தங்களது வழக்கு தொடர்பாக கூகுள் வரைபடத்தை ஆராய்ந்து அறிந்தால் உண்மை வெளிவரும் என வழக்கின் பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமார் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார். (செ-4)




## ஞானசார...

அமைப்பின் செயலாளர் உட்பட சிலர் கைது செய்யப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கில் இருந்து இவர்களை விடுதலை செய்த தீர்ப்பை ரத்துச் செய்து விட்டு, தண்டனை வழங்குமாறு கோரி சட்டமா அதிபர் மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பாணையை விடுத்திருந்தது. சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனு நீதியரசர்கள் மாலினி குணரட்ன, தேவிகா டி லிவேரா தென்னகோன் ஆகியோர் முன்னிலையில் ஆராயப்பட்டுள்ளது. (செ-11)


**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு ஆண் வேலையாட்கள் தேவை.
✷ " 25 வயதுக்குட்பட்டவர்கள்"
"Dish Antana" பொருத்துவதில் முன் அனுபவம் உள்ளவர்களும் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு :
(4042) 021 222 6807

**British College of Higher Studies**
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935
(சி-4154)


# கண்ணீர்த் துளிகள்...

**வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், 149/3, கலாசாலை வீதி (பாற்பண்ணை வீதி) திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மதி கலர்ஸ் உரிமையாளரின் பாசமிகு மாமியாராகிய**

## அமரர் திருமதி கைலாசபிள்ளை செல்வராணி





(C-4158)

குடும்ப குலவிளக்காய் ஒளி வீசினீர்!
குடும்ப விருட்சம் செழித்தோங்க
ஆணிவேராய் நீர் இருந்தீர்!
இன்று ஏன்
திடீரென்று எம்மை பிரிந்தீர்?
ஆணிவேர் அறுந்த விருட்சமாய்
கலங்கி நிற்கும் குடும்பத்தார்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு
ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 11.04.1947
இறப்பு 27.03.2016

**மதி கலர்ஸ் நிர்வாகம்**



# வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மண்டலாபிஷேக குடமுழுக்கு

31/03/2016 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று இரவு 7 மணியளவில் வசந்தமண்டப பூசையும் பின் விசேட மேளக் கச்சேரியுடன் பூந்தண்டிகையில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும் - வெள்ளைக் கொம்பன்
விநாயகனைத் தொழ துள்ளி ஓடும்
தொடரும் வினைகளே

(C-4153)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.